விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 023 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 26 வியாழக்கிழமை (11.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## எதிர்வரும் செப்ரெம்பர் ஜனாதிபதித் தேர்தல்

### 2025 ஜனவரி பொதுத் தேர்தல் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு) 2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுத் தேர்தலை எதிர்வரும் 2025 ஜனவரியில் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## 'யுக்திய' நடவடிக்கையில் மனித உரிமை மீறல்கள்

### அமெரிக்கா கவலை

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட "யுக்திய" நடவடிக்கையின்போது இடம் ▷15

### பருத்தித்துறை நகரில்

## பேருந்து சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல்

(கரணவாய்)

பருத்தித்துறை நகரில் பேருந்து சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

பேருந்துக்குள் ▷15

## ஜனாதிபதியைச் சந்தித்த பிரித்தானிய இளவரசி

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள பிரித்தானிய இளவரசி ஆன், ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பிரித்தானிய இளவரசியுடன் அவரின் கணவர் வைஸ் ▷02

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

# சிறீதரன் - விஜயதாஸ கடும் வாக்குவாதம்



### பாராளுமன்றில் நேற்று கடும் அமளி

(கொழும்பு) பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மீதான விவாதத்தில் சிவஞானம் சிறீதரன் எம்.பிக்கும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. இதனால் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கடும் அமளி நிலை ஏற்பட்டது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.எம்.எப் பிரதிநிதிகள் நாட்டுக்கு விஜயம்

### பொருளாதார நிலைமைகளை ஆராய்வர்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமைகளை குறித்த குழு ஆராயவுள்ளது. ▷15

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு 999 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் "யுக்திய" விசேட சோதனை நடவடிக்கையின் கீழ் 999 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது ▷15

## யாழ்ப்பாணம் - சென்னை கப்பல் சேவை

### ஆளுநர் - இந்.துணைத் தூதுவர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை தொடர்பில் வடமாகாண ஆளுநருக்கும் இந்தியத் துணைத் தூதுவருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் ▷15



## சீனியின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

வற் வரி 18 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் சந்தையில் ஒரு கிலோகிராம் ▷15

## வடக்கு காணிப் பிரச்சினைகளுக்கு இரண்டு மாதங்களில் தீர்வு

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன



(கொழும்பு)

வடக்கில் வசிக்கும் அனைத்து மக்களின் காணி உரிமைப் பிரச்சினையை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் பாராளுமன்றத்தில் ▷16

## சுகாதார ஊழியர்கள் இன்று பணிப் புறக்கணிப்பு

(கொழும்பு)

வைத்தியர்களுக்கு மாத்திரம் 35 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்து வைத்தியசாலை நிர்வாக அதிகாரிகள் மற்றும் கனிஷ்ட சுகாதார ஊழியர்கள் ஒன்றிணைந்து இன்று காலை 6 மணி முதல் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தமக்கும் 35 ஆயிரம் ▷02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறீதரன்...

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மீதான விவாதம் நேற்று சபையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றிய சிறீதரன் எம்.பி பயங்கரவாத சட்டத்தின் வரலாறுகள் இரத்தக்கறை படிந்தவை பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டு 44 ஆண்டுகளில் 3 இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டனர் என உரையாற்றியிருந்தார்.

**சிறீதரனின் உரையின் பின்னர் கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர்,**

அல்பிரட் துரையப்பா இந்து கோவிலின் உள்ளே கொல்லப்பட்டது இந்த சட்டத்தின் மூலமா? 100 இற்கும் அதிகமான தமிழ்த் தலைவர்களை பிரபாகரன் கொன்றுகுவித்தது இந்தச் சட்டத்தின் ஊடாகவா?. தமிழ் மக்களுக்கும் இந்த நாட்டுக்கும் தலைமையை வழங்கக் கூடிய பல தலைவர்கள் இருந்தனர்.

லக்ஷ்மன் கதிர்காமர் போன்ற தலைவர்கள் இந்த நாட்டின் ஜனாதிபதியாக அல்லது பிரதமராக வரக் கூடிய சூழ்நிலை இருந்தது. அவர் உலகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தலைவராக இருந்தார்.

அமிர்தலிங்கம், நீலம் திருச்செல்வம் போன்றோரை படுகொலை செய்தது யார்?. தலதா மாளிகைக்கு குண்டு வீசி அங்கிருந்த அப்பாவி மக்களை படுகொலை செய்தது யார்?. காத்தான்குடியில் முஸ்லிம்களை படுகொலை செய்தது யார்?. இவற்றை அனுமதிக்கின்றீர்களா?. தீவிரவாதிகளை ஒழித்தமைதான் குற்றமா?.

கட்டுநாயக்கவில் விமானங்களை குண்டு வைத்து பிரபாகரன் தகர்த்தார். இது நல்ல விடயமா?. ரயில்கள், பஸ்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தினர். இவை நல்ல விடயங்களா?. தீவிர வாதத்தை ஒழிக்க ஏதாவது பணியை செய்தால் அதனை தான் இவர்கள் தீமையான விடயம் என்று கூறுகின்றனர்.

ஆனந்த சங்கரி தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத் திய முக்கியமான ஒரு தலைவராவார். அவரது வெள்ளவத்தை வீட்டில் புலிகள் தாக்குதல் நடத்திய போது அவர் எனது வீட்டுக்குத்தான் ஓடிவந்தார். அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவிடம் அழைத்துச் சென்று அவருக்கு பாதுகாப்பை பெற்றுக் கொடுத்தேன். அந்த பாதுகாப்புதான் இன்றும் அவருக்கு வழங்கப்படுகிறது. ஆனால், அவரது மகன் ஹரி ஆனந்த சங்கரி கனடாவில் புலிகள் நல்லவர்கள் என பிரசாரம் செய்து வருகிறார்.

பங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டதால்தான் இன்று நீங்களும் பாராளுமன்றத்தில் இருக்கின்றீர்கள். சிறந்த தலைவர்களை பிரபாகரன் கொன்றொழித்தமையால்தான் உங்களை போன்றோர் பாராளுமன்றம் வர முடிந்தது. அதனால் முட்டாள்தனமான கருத்துகளை கூற வேண்டாம். உங்களை போன்றோர் இருக்கும் வரை வடக்கு, கிழக்கு மக்களுக்கு தீர்வு கிடைக்க போவதில்லை. நீங்கள்தான் தமிழ் மக்களின் சாபம் என்றார்.

**நீதி அமைச்சரின் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளித்த சிறீதரன் எம்.பி.,**

பிரபாகரன் இருந்த தருணத்தில் இந்த பாராளுமன்றத்தில் 22 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். தற்போதைய நிலையை ஒருமுறை சிந்தித்து பார்க்க வேண்டும். 1954ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் தந்தை செல்வநாயகம் அகிம்சை வழியில் போராடிய போது அந்தப் போராட்டத்தை குண்டர்களை கொண்டு தாக்கியது யார்? திருகோணமலை கந்தளையில் 184 விவசாயிகளை வெட்டிக்கொன்றது யார்?. அப்போது ஆயுதங்கள் இருந்தனவா?.

வெளிக்கடை சிறையில் தமிழ் கைதிகள் கொலை செய்யப்பட்டார்கள். குட்டிமணி, தங்கத்துரை படுகொலை செய்யப்பட்டார்கள். இவை அனைத்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்தான் செய்யப்பட்டன.

கொக்கட்டிசோலை, நவாலி என பல இடங்களில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

ஆயுங்களை நாங்கள் விரும்பி தூக்கியவர்கள் அல்ல. ஆயுதங்கள் எங்கள்மீது திணிக்கப்பட்டது என பிரபாகரன் கூறியிருந்தார். ஆகவே, மீண்டும் ஆயுங்களை திணிக்க வேண்டாம் என்று பதிலளித்தார். (ம-7)

## ஜனாதிபதியை...

அட்மிரல் சேர் திமொதி லோரன்ஸ்ும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 வருடங்களைக் கொண்டாடும் வகையில் இளவரசி ஆன் நேற்று காலை நாட்டை வந்தடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சுகாதார...

கொடுப்பனவை வழங்குமாறு கோரியே இந்த பணிப்பகிஷ்கரிப்பு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதனிடையே, சில வைத்தியசாலைகளின் தாதியர்களும் நேற்றும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


A/L தமிழ்
2024, 2025
(பிரத்தியேகம் & குழு)
1. ஆரம்ப அலகிலிருந்து
2. அதிக கவனிப்பு
3. பாடநூல் ஒன்று Free
(18585)
நேரடி & Zoom மூலம்
நாக.தமிழிந்திரன்
076 772 7398
M.S.O வகுப்புக்கள்
Jaffna College

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை
காணி அபிவிருத்தி சபைக்கு கீழ் இயங்கும் LRDC பாதுகாப்பு நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் நல் தேக ஆரோக்கியமுடைய 19 - 50 வயதுடையோர் விண்ணப்பிக்கலாம்.
(18586)
071 961 5751 கங்காபரன்
077 433 1841 கிருபாகரன்

# மரண அறிவித்தல்

## Lion காளிக்குட்டி முத்துக்குமார்

**( Saje motors/ Saje Agri கிளிநொச்சி – உரிமையாளர் )**



*மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட Lion காளிக்குட்டி முத்துக்குமார்(Saje motors/ Saje Agri - உரிமையாளர்) அவர்கள் நேற்றுமுன்தினம் 09.01.2024 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற காளிக்குட்டி மற்றும் அழகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மரியதாசன் - இரத்தினாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெனீவியின் அன்புக் கணவரும் பிரவீனா, பிரியந்தி, சஜீசன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும் கோகுலன், பிரதீபன், சுவேதா ஆகியோரின் அன்பு மாமனாரும் அஸ்வதா, அக்ஷதா, நிர்மயி, பிரணீஷ், ஹரீஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற லீலாவதி, காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் சந்திரசோதி, ஜெகசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுதர்சன், சுதாகரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ரமேஷ், சுரேஷ், கமலேஷ், அகிலன், அமலேஸ், கோகிலா, முகுந்தன், வனிதா, வல்லிபுரம், பத்மநாதன், கவிதா, குமுதா, அமுதா, தமிழ்வாணன், சுகிர்தா, சதீஸ், கலைமதி ஆகியோரின் மாமாவும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.01.2024) வியாழக்கிழமை பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**119/10, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.**

**076 600 4820
077 791 1442**

*தகவல்:*
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூடநம்பிக்கைகளால்
# தட்டம்மை மீண்டும் தலைதூக்கும் அபாயம்
## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**தட்டம்மை நோய்க்கான தடுப்பூசி ஏற்றிக் கொள்ளத் தேவையில்லை என சமூகத்தில் நிலவும் மூடநம்பிக்கையால் நாட்டு மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

மூட நம்பிக்கைகளின் காரணமாக இதுவரை 7500 குழந்தைகளுக்கு தட்டம்மை நோய் தடுப்பூசி ஏற்றப்படவில்லை என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத காரணத்தினால் நாட்டில் 22 மில்லியன் சனத்தொகைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தட்டம்மை நோய்க்கான தடுப்பூசி ஏற்றிக் கொள்ளத்தேவையில்லை என சமூகத்தில் மூடநம்பிக்கை நிலவி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் தட்டம்மை மீண்டும் தலை தூக்கும் அபாயம் உருவாகியுள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தங்களது பிள்ளைகள் தட்டம்மை தடுப்பூசி ஏற்றிக்கொள்ளும் வயதுடையவர்கள் என்றால் உடனடியாக மாகாண தடுப்பூசி ஏற்றும் நிலைகளுக்கு அழைத்துச் சென்று தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (நி-5-6)

## கொழும்பை வந்தடைந்த பிரித்தானிய இளவரசி



(கொழும்பு)

மூன்று நாள் விஜயமாக பிரித்தானிய இளவரசி ஆன் நேற்றுக் காலை இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

விசேட விமானத்தில் இலங்கை வந்த பிரித்தானிய இளவரசி ஆனினை விமான நிலைய அதிகாரிகள் வரவேற்றனர். பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான 75 வருட இராஜதந்திர உறவுகளை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்வுகளின் ஒரு பகுதியாக அவர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது இளவரசி கண்டி மற்றும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார்.

மேலும், அவர் நாட்டில் இருக்கும் நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட அரசியல் தலைவர்களையும் சந்திக்கவுள்ளதாகவும் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5-6)

## 500 பல்பொருள் அங்காடிகள் மூடப்படும் அபாயம்

(கொழும்பு)

நாடு முழுவதும் ஐந்நூறு பல்பொருள் அங்காடிகள் மூடப்படும் அபாயத்தில் உள்ளதாக வர்த்தக சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

நாட்டில் உள்ள பல பல்பொருள் அங்காடிகளில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 75% குறைந்துள்ளதாகவும் வர்த்தக சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பல பல்பொருள் அங்காடிகளில் அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் இருப்பதால் தற்போதைய வருமானத்தின் அடிப்படையில் பணியாளர்களை பராமரிப்பது கடினம் என்றும் மேலும், சில வர்த்தகர்கள், பொருட்களை விற்கும் முகவர்களுக்கு தினசரி கொடுப்பனவைக் கூட கொடுக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## தொழுநோயாளர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஆண்டில் 1,550 தொழுநோயாளிகள் அடையாளம் காணப்பட்டதாகவும் அவர்களில் 173 பேர் பாடசாலை மாணவர்கள் எனவும் தொழுநோய் எதிர்ப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

மேலும், அதிக நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்தும் இரண்டாவது மற்றும் மூன்றாவது அதிக நோயாளர்கள் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலிருந்தும் பதிவாகியுள்ளனர்.

பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்து வரும் நோய்த் தொற்றுகளைக் கருத்தில் கொண்டு, தொழுநோய் தொற்றுகளைக் கண்டறிவதற்கான தேசிய அளவிலான திட்டம் பாடசாலை மட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6)





யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று புதன்கிழமை முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

## செய்தித்துளிகள்

### ‘யால’ பூங்காவில் வெள்ளம்

(கொழும்பு)

தொடர்மழை காரணமாக சிறிய குளங்கள் நிரம்பி வழிவதால் யால பகுதியில் பலதுபன பிரதான நுழைவாயில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதன் காரணமாக சுற்றுலாப் பயணிகளுடன் இரண்டு வாகனங்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளன.

இந்நிலையில், யால தேசிய பூங்காவிற்கு செல்வதற்கான பிரதான நுழைவாயில் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது. எனினும், கடகமுவ நுழைவாயிலில் இருந்து சுற்றுலாப் பயணிகள் யால பூங்காவிற்குள் பிரவேசிக்க முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

### வெள்ளத்தில் சூழ்ந்துள்ள செல்லக்கதிர்காமம்



(கதிர்காமம்)

மாணிக்க கங்கை பெருக்கெடுத்துள்ளதால் செல்லக்கதிர்காமத்தின் புனித பூஜை பூமியை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

இதன் காரணமாக யாத்திரை சென்றுள்ளவர்களும் செல்லவிருப்பவர்களும் பாதுகாப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

### கடல் அட்டைகளை கடத்திய அறுவர் கைது

**2032 கிலோ கடலட்டைகள் பறிமுதல்**

(புத்தளம்)

சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 2032 கிலோ கிராம் கடல் அட்டைகள் புத்தளம், கற்பிட்டி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட உச்சமுனைப் பகுதியில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினரால் உச்சமுனைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த கடல் அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன. இதன்போது, 71 உரப் பைகளில் 2032 கிலோ கிராம் கடல் அட்டைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இச்சம்பவத்தில் ஆறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மேற்கிந்திய தீவுகள் தொடருக்கான அவுஸ்திரேலியா அணி அறிவிப்பு




மேற்கிந்திய தீவுகள் தொடருக்கான 13 வீரர்கள் கொண்ட டெஸ்ட் அணியை அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இரண்டு போட்டிகள் கொண்ட தொடர் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

டேவிட் வோர்னரின் ஓய்வுக்குப் பிறகு கமரூன் கிரீன் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ள அதே நேரம் மத்தியூ ரென்ஷா அணியில் மீண்டும் இடம் பிடித்திருகின்றார்.

பட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியில் ஸ்கொட் போலண்ட், அலெக்ஸ் கேரி, கமரூன் கிரீன், ஜோஷ் ஹசில்வுட், டிராவிஸ் ஹெட், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லாபுசாக்னே, நாதன் லியோன், மிட்செல் மார்ஷ், மேத்யூ ரென்ஷா, ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க் ஆகியோர் இடமபெற்றுள்ளனர்.

இதேநேரம் ஸ்டீவ் ஸ்மித் தலைமையிலான ஒருநாள் அணியில் சீன் அபோட், நாதன் எல்லிஸ், கமரூன் கிரீன், ஆரோன் ஹார்டி, டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், மார்னஸ் லாபுசாக்னே, கிளென் மக்ஸ்வெல், லான்ஸ் மோரிஸ், ஜே ரிச்சர்ட்சன், மேட் ஷார்ட், அடம் சாம்பா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

(நி-5-6)

# ஆஸி ஓபன் டென்னிஸ் ரபெல் நடால் விலகல்

மெல்போர்னில் தொடங்கும் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபனில் இருந்து விலகுவதாக ரபெல் நடால் தெரிவித்தார்.

இது குறித்து நடால் கூறுகையில் "நல்லவேளையாக ஏற்கனவே காயம் ஏற்பட்ட இடத்தில் பிரச்சினை இல்லை. ஆனாலும் தற்போது 5 செட் வரை தாக்குப் பிடித்து விளையாடும் அளவுக்கு தயாராக முடியாது. அதனால் தாயகம் திரும்பி, எனது வைத்தியரை கலந்தாலோசித்து சிகிச்சை மற்றும் ஓய்வு எடுக்க உள்ளேன். உற்சாகமான ஆதரவு அளிக்கும் மெல்போர்ன் ரசிகர்கள் முன் விளையாட இயலாமல் போவது வருத்தம் அளிக்கிறது" என்றார்.



22 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான நடால், 2009, 2022 ஆம் ஆண்டுகளில் அவுஸ்திரேலிய ஓபனை வசப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (5-6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3013

**வெனிஷியா**


சம்பளம் வாங்குன உடனே கடனெல்லாம் அடைச்சிட்டு நம்ம கிட்ட இருக்கிற மிச்சத்த பாத்தா,



அடுத்து யாருக்கிட்ட கடன் வாங்கலாம்ன்னு யோசிக்க வேண்டியதா இருக்க...

**ரஞ்சி**

யாரு சாமி இவன்...




தூக்கிட்டு வாங்கப்பா அந்த செல்லத்த...

**தேவா**

ஹலோ எயாடெல்லா? எனக்கு பில் அதிகமா வந்திருக்கு நான் அவ்வளவு பேசவே இல்லையே?




இப்போ ஆபீஸ்ல இருக்கேன். சாயங்காலம் சினிமா போயிட்டு அப்படியே நேரா வீட்டுக்கு போயிடுவேன்.

**பிறின்சி**




அது கிழிஞ்ச நோட்டாத்தான் இருக்கும்னு.

**சந்துரு**

சின்ன வயசுல என் பிரண்ட கூட்டிக்கிட்டு நாசாவுக்கு போகனும்னு ஆசப்பட்டேன்



வளர்ந்ததுக்கு அப்புறம்தான் தெரிஞ்சுது. அவனோட சேர்ந்தா நாசாக்கு போக முடியாது. நாசமாதான் போக முடியுமுன்னு.

**மேரி**

உனக்கு ENGLISH-ல பேச தெரியுமா ??



யாராவது பேசுனாங்கனா ENGLISH-ல பேசுறாங்கனு தெரியும்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி
## வைத்தியசாலைகளுக்கான உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகள் வழங்குவதற்கான பெறுகைகள் - 2024/2025

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கான உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகள் வழங்குவதற்கு இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

2. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித் தனியாக மேற்கொள்ளப்படும்.

3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   - அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - ஆ. அத்துடன், மூல உணவுகளை வழங்குவதற்கான அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை -கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.30 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 11.01.2024 ஆம் திகதி முதல் 24.01.2024 ஆம் திகதி வரை மு.ப 09.30 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினைக் கட்டணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. 17.01.2024 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறைகள் தொடர்பான முன்கூட்டம் (pre-bid meeting) எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்து கொள்வது அவசியம்.

8. கேள்விகள் யாவும் 26.01.2024ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின், கண்டி வீதி, கிளிநொச்சி முகவரியில் நேரடியாக நிதிக்கிளையில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் 26.01.2024 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு திறக்கப்படும்.

| இல | விபரங்கள் | குறியீட்டு இலக்கம் | பெறுகைப் பிணைத் தொகை | பெறுகைப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத வைப்பு |
|---|---|---|---|---|---|
| 01. | பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம். | NP/K/RDHS/CF/ 2024/8 | ரூபா. 40,000.00 | 25.04.2024 | ரூபா. 2000.00 |
| 02. | பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி. | NP/K/RDHS/CF/ 2024/7 | ரூபா. 40,000.00 | 25.04.2024 | ரூபா. 2000.00 |
| 03. | பிரதேச வைத்தியசாலை வேரவில். | NP/K/RDHS/CF/ 2024/6 | ரூபா. 40,000.00 | 25.04.2024 | ரூபா. 2000.00 |
| 04. | பிரதேச வைத்தியசாலை பளை. | NP/K/RDHS/CF/ 2024/5 | ரூபா. 40,000.00 | 25.04.2024 | ரூபா. 2000.00 |
| 05. | பிரதேச வைத்தியசாலை அக்கராயன்குளம். | NP/K/RDHS/DF/ 2024/4 | ரூபா. 60,000.00 | 25.04.2024 | ரூபா. 2500.00 |
| 06. | பிரதேச வைத்தியசாலை தர்மபுரம். | NP/K/RDHS/DF/ 2024/3 | ரூபா. 60,000.00 | 25.04.2024 | ரூபா. 2500.00 |
| 07. | பிரதேச வைத்தியசாலை பூநகரி. | NP/K/RDHS/DF/ 2024/2 | ரூபா. 60,000.00 | 25.04.2024 | ரூபா. 2500.00 |
| 08. | ஆதார வைத்தியசாலை முழங்காவில். | NP/K/RDHS/DF/ 2024/1 | ரூபா. 60,000.00 | 25.04.2024 | ரூபா. 2500.00 |

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) ஒவ்வொரு பெறுகைக்கும் தனித் தனியாக செலுத்தப்படல் வேண்டும்.

10. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**
TP-0212285719, Fax-0212285931
E mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com
(சி- 8115)

# இராசிபலன்

**11.01.2024**
**மார்கழி 26, வியாழக்கிழமை**
**அமாவாசை முன்னிரவு 6.36 மணிவரை**
**பூராடம் முன்னிரவு 6.54 மணிவரை**

**சுபநேரம் -8.03-9.33 மணிவரை**
**இராகுகாலம்-2.03-3.33 மணிவரை**
**அமாவாசை விரதம்,**
**கெர்ப்போட்டம் முடிவு.**

**சந்திராஷ்டமம்-**
**ரோகினி, மிருகசீரிடம்.**

**வளவன்**



இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.



கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.



உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர்,.



சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு சிறப்பினைத் தரும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.



பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பிறர் உதவியுண்டு.



பேச்சில் கனிவு பிறக்கும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு



குடும்ப மகிழ்ச்சி கூடும், உறவினர் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்



மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, போசன சுகமுண்டு, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.



வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.



தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பணவரவால் சந்தோசமடைவீர்கள், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள்.



பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**கடந்துபோன நேரம் ஒருபோதும் திரும்புவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 ஏக்கர் காணியை விடுவிக்க உத்தேசிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள 23 ஏக்கர் காணிகளை விடுவிக்க உள்ளதாக இராணுவத்தினர் யாழ். மாவட்ட செயலகத்திற்கு அறிவித்துள்ளனர். வலி. வடக்கில் வறுத்தலைவிளான் பகுதியில் உள்ள 23 ஏக்கர் காணிகளையே விடுவிக்க உள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணி முப்படைகளின் வசம் உள்ள நிலையில் , அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் 23 ஏக்கர் காணிகளை விடுவிக்க இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-6-33)

## சங்குவேலியில் அடாவடி; சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சங்குவேலி பகுதியில் வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தி பல இலட்ச ரூபாய் பெறுமதியான சொத்துக்களுக்கு நாசம் விளைவித்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரை கைது செய்துள்ளதுடன். தாக்குதலுடன் தொடர்புடைய ஏனையவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-33)

## 12 தமிழக மீனவர்கள் விளக்கமறியலில்

(கரணவாய்)

கைதான பன்னிரெண்டு தமிழக மீனவர்களையும் நாளை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதி மன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுதுரை நேற்று உத்தரவிட்டார்.

12 தமிழக மீனவர்களின் வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(நி-5-6-60)

## தைப்பொங்கல் வழிபாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் தைப் பொங்கலை முன்னிட்டு எதிர் வரும் 15 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 8 மணிக்கு விஷேட பூஜை வழிபாடுகள் நடைபெறும் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-5-6)

# ஜனாதிபதியின் வடக்கு விஜயம்

# தேர்தல் பிரசாரத்திற்கான உத்தியே

## சுரேஷ் பிரேமச்சந்திரன்

**(யாழ்ப்பாணம்)**

**ஜனாதிபதி ரணிலின் வார்த்தை ஜாலங்கள் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான ஒரு முயற்சியாகத் தென்படுகிறதே தவிர, ஜனாதிபதியின் மீதோ அவரது தலைமையின் மீதான அரசின் மீதோ நம்பிக்கை கொள்வதற்கு இடமளிக்கவில்லை. அரசாங்கத்தின் இவ்வாறான தொடர் நடவடிக்கைகள்தான் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான சூழ்நிலையை நிர்ப்பந்தித்துள்ளது என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உத்தியோக பூர்வ பேச்சாளர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**




அண்மையில் ஜனாதிபதியின் வடமாகாண விஜயம் தொடர்பில் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

ஜனாதிபதியின் வருகை தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகள் இருந்தன. அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முடிவுகள் எட்டப்பட வேண்டும், காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும், பௌத்த சிங்களமயமாக்கலை நோக்கமாகக் கொண்டு தமிழர் பிரதேசங்களில் பலாத்காரமாக நிர்மாணிக்கப்படும் பௌத்த கோயில்களின் பணிகள் நிறுத்தப்பட வேண்டும்.

இவை . தொடர்பில் ஜனாதிபதி தெளிவான பதிலை அளிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த விடயங்கள் தொடர்பாக எந்தவிதமான ஆக்க பூர்வமான கலந்துரையாடல்களையோ தெளிவுபடுத்தல்களையோ மேற் கொள்ளவில்லை.

நாட்டின் அந்நியச் செலாவணியை சேமிப்பதற்கும் விவசாயத்தைத் தொழிற்சாலையாக மாற்றுவதற்கும் உழைத்த வடக்கு-கிழக்கின் பொருளாதார வளங்களை அழித்துவிட்டு அதற்காக ஒரு வருத்தம்கூட தெரிவிக்காதவர்கள் இன்று வடக்கின் பொருளாதார அபிவிருத்தி குறித்து பேசுவது தேர்தல் பிரசாரத்திற்காக மட்டுமே. தென்னிலங்கை அரசியல் சக்திகளிடத்தில் அனைத்து தேசிய இனங்களையும் ஐக்கியப்படுத்தி நாட்டுப்பற்றுடன் இலங்கையை வளமிக்க நாடாக மாற்றுவதற்கான எந்தத் திட்டமும் இல்லை என்பதும் நாட்டு மக்களை பிளவுபடுத்தி தமக்கான வாக்கைப் பெற்றுக் கொள்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதும் ஜனாதிபதியின் அண்மைய வடமாகாண விஜயமும் நிரூபித்துள்ளது என தெரிவித்தார். (நி-5-6-33)

## 90 கிலோ கஞ்சா உரும்பிராயில் மீட்பு



(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியில் உள்ள வீடொன்றில் பெருந்தொகை கஞ்சா போதைப் பொருள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், குறித்த வீட்டினை பொலிஸ் அதிரடிப்படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

அதன்போது வீட்டில் இருந்து 35 பொதிகளில் இருந்து சுமார் 90 கிலோ கஞ்சாவை மீட்டுள்ளனர்.

அதனை அடுத்து குறித்த வீட்டில் வசித்து வந்த நபரை கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சாவையும் கைது செய்யப்பட்ட நபரையும் மேலதிக நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளனர். (நி-5-6-33-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 500 | 600 | 600 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1100 | 1300 | 1000 |
| தக்காளி | 500 | 500 | 600 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 140 | 150 |
| கோவா | 480 | 550 | 500 | 600 |
| கரட் | 850 | 1000 | 950 | 1400 |
| பூசணி | 120 | 160 | 160 | 200 |
| புடோல் | 300 | 260 | 250 | 250 |
| வாழைக்காய் | 250 | 240 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 380 | 400 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 450 | 450 | 450 | 600 |
| பாகற்காய் | 800 | 800 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 300 | 240 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 600 |
| லீக்ஸ் | 450 | 400 | 450 | 500 |
| பீற்றூட் | — | 800 | 750 | 800 |
| கறிமிளகாய் | 600 | 600 | 800 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 400 | 400 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 500 | 450 | 700 | 500 |
| கீரை - 1 பிடி | 160 | 180 | 200 | 200 |
| தேசிக்காய் | 250 | 300 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 70-110 |
| இராசவள்ளி | 750 | 600 | 550 | 500 |
| வெங்காயப்பூ | 800 | 1000 | 700 | 1000 |
| முள்ளங்கி | 200 | 300 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 35 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 120 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரித உணவு கலாசாரத்தால் தொற்றா நோய்கள் அதிகரிப்பு

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

**அதிகரிக்கும் துரித உணவு கலாசாரத்தின் காரணமாக நாட்டில் தொற்றாத நோய்கள் அதிகரித்து வருவதால் நாட்டு மக்கள் வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

சுகாதார அமைச்சினால் நேற்று நடத்தப்பட்ட தொற்றாத நோய்கள் குறித்த சந்திப்பு ஒன்றிலேயே இந்த விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

நாட்டில் அதிகரித்துள்ள துரித உணவு கலாசாரத்தால் மக்கள் எண்ணெய், சீனி மற்றும் உப்பு அதிகளவில் அடங்கிய உணவுகளை உட்கொள்கிறார்கள்.

இதன்மூலம், நாட்டு மக்களிடம் நீரிழிவு, புற்று நோய் மற்றும் இதய நோய்கள் அதிகரித்து வருவதாக சுகாதார நிபுணர்கள் குறித்த கூட்டத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தொடர்ந்து, குறித்த தொற்றாத நோய்கள் அதிகரிப்பதை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண மற்றும் சுகாதார நிபுணர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பயங்கரவாதத்தடைச் சட்டத்தில் முழுமையான மாற்றம் தேவை

## சபையில் சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பயங்கரவாதச் சட்டத்தின் வரலாறுகள் இரத்தக் கறை படிந்தவை என்பதால் இது குறித்து ஆழமான விவாதங்கள் அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டு 44 ஆண் டுகளில் 3 இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப் பட்டும் காணாமல் ஆக்கப் பட்டதையும் சிறீதரன் சபையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

நீதி அமைச்சர் புதிய சட்ட மூலம் ஒன்றை கொண்டு வந்துள்ள போதும் இதில் தமிழ் மக்களுக்கு திருப்தி இல்லை.

எனவே பயங்கரவாத சட்ட த்தில் சிறு சிறு மாற்றங்களை கொண்டு வராமல் முழுமையான மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குறிப்பிட்டார். (நி-5-6)

# பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம் பாராளுமன்றில் நேற்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்ட மூலத்தை நீதிமன்றத்தில் சவாலு க்குட்படுத்த கால அவகா சம் வழங்கப்பட்டு, அதன் மீதான இரண்டாம் வாசி ப்பு விவாதம் முன்னெ டுக்கப்படுமென நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.


இதனிடையே, பெறு மதிசேர் வரிக்கு உள்ளா க்கப்பட்டுள்ள பொருட் களின் விலைமாற்றம் இதுவரை சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்த வில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளு மன்றத்தில் தெரிவித்தார்.

மரிக்கார் முன்வைத்த கேள் விக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். (நி-5-6)


31 ஆம் நாள் நினைவஞ்சலி

எங்கள் பாடசாலையின் ஆரம்பக் கல்வி ஆசிரியை
செல்வி. **க.பிரியதர்சினி** அவர்களின்
பாசமிகு சகோதரர்

**அமரர்.கனகரத்தினம் அருள்நாதன்**




அவர்களின் மறைவால் துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு
துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த இரங்கல்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

(8570) தோற்றம்:- 1960.12.27 மறைவு:-2023.12.12

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். **அன்னலிங்கம் தெய்வீகலிங்கம்**



திதி:அமாவாசை (2024-01.11)

வாய்மை தவறாத
கடமை தவறாத
கடமைகளை எங்கும்
நிறைவாகச் செய்த பெருமை
உங்களிற்கே உரித்தான
சொத்தாகும் அப்பா!
தம்மை நம்பினோருக்கு கரம்
கொடுக்கும் தெய்வமாக விளங்கும்
தந்தையே உங்களைப் பிரிந்து
ஈராண்டு கழிந்ததப்பா!!
இதய வலிகளுடன் நாட்கள் கழியுதப்பா!!!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தோற்றம்:- 21.11.1957 மறைவு:-02.01.2022

(18574)

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.


குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

## அமெரிக்காவில் கார் பேரணி



(வோஷிங்டன்)

இந்தியாவில், அயோத்தியில் ராமர் கோவில் கும்பாபிஷேக விழாவையொட்டி அமெரிக்காவில் கார் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள ராமர் கோவிலின் கும்பாபிஷேகமானது எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இந்த நிலையில் அமெரிக்கா - டெக்சாஸ் மாகாணம் ஹியூஸ்டன் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கார் பேரணி நடத்தப்பட்டது.

குறித்த கார் பேரணியில் 216 கார்களில் இந்தியா, அமெரிக்கா மற்றும் காவிக் கொடிகளுடன் இந்து மதத்தினர் நூற்றுக்கணக்கானோர் இந்த பேரணியில் பங்கேற்றனர்.

ஹியூஸ்டனில் உள்ள ஸ்ரீமீனாட்சி கோவிலில் தொடங்கிய பேரணி 100 கிலோ மீற்றர் தூரம் பயணித்து செல்லும் வழியில் உள்ள 11 கோவில்களை கடந்து ரிட்ச்மவுண்ட் பகுதியில் உள்ள ஸ்ரீசாரதாம்பா கோவிலில் நிறைவடைந்தது. "ஜெய் ஸ்ரீராம்" என்ற கோஷத்துடன் பேரணி நடைபெற்றது. (நி-5-6)

# அதிகளவான சுற்றுலாப் பயணிகளை அனுப்புமாறு சீனாவிடம் மாலைதீவு ஜனாதிபதி கோரிக்கை




(பீஜிங்)

மாலைதீவின் புதிய ஜனாதிபதி முகமது முய்சு சீனாவிலிருந்து அதிகளவில் சுற்றுலா பயணிகளை அனுப்புமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு 5 நாட்கள் பயணமாக சீனாவுக்குச் சென்றுள்ளார். இரண்டாவது நாளான செவ்வாய்க்கிழமை தென்கிழக்கு சீனாவின் ஃபுஜியான் பகுதியில் பேசிய அவர், மாலைதீவுடன் நெருங்கிய உறவு கொண்டதும் பரஸ்பர மேம்பாட்டில் மாலைதீவின் சிறந்த நட்பு நாடாகவும் சீனா விளங்குகிறது. கொரோனாவுக்கு முன்புவரை எங்களின் முதன்மை சந்தையாக சீனா இருந்தது.

இதனை தக்கவைத்துக் கொள்ளும் வகையில் சீனா அதிக அளவிலான சுற்றுலா பயணிகளை மாலைதீவுக்கு அனுப்ப வேண்டும் என தெரிவித்தார்.

மாலைதீவுக்கு செல்லும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. ரஷ்யா இரண்டாவது இடத்திலும், சீனா மூன்றாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஹவுதியின் 21 ஏவுகணைகளை செயலிழக்கச் செய்த அமெரிக்கா

(வோஷிங்டன்)

செங்கடலில் பதற்றத்தை ஏற்படுத்தி வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் 21 ஏவுகணைகளை அமெரிக்கா வீழ்த்தியுள்ளது.



கடந்த ஒக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பினரிடையே தொடங்கிய போர் 90 நாட்களை கடந்து தீவிரமாக நடைபெற்றுவருகிறது.

இந் நிலையில் ஹமாஸ் அமைப்பினரை ஆதரிக்கும் வகையில் எமன் நாட்டின் ஹவுதி அமைப்பினர் செங்கடல் பகுதியில் இஸ்ரேலுக்கு செல்லும் கப்பல்களையும் தாக்கி வருகிறது.

இந் நிலையில், தெற்கு செங்கடல் பகுதியில் பல சர்வதேச சரக்கு கப்பல்கள் செல்லும் வழித்தடத்தை குறிவைத்து ஏமனின் ஹவுதி அமைப்பினர் 21 ஏவுகணைகளால் தாக்க முனைந்தனர்.

இவற்றில் 18 ஒரு வழி டிரோன்களும், 2 கப்பல்களை தாக்கும் க்ரூயிஸ் ஏவுகணைகளும் மற்றும் கப்பல்களை தாக்கும் பெரும் தொலைவு பாயும் ஏவுகணை ஒன்றும் அடங்கும்.

ஆனால், ஹவுதியின் இத்தாக்குதலை வெற்றிகரமாக எதிர்கொண்டு அந்த தொடர் ஏவுகணைகளை செயலிழக்க செய்ததாக அமெரிக்க கடற்படையின் மத்திய ஆணையம் தெரிவித்துள்ளது.

மனித உயிரிழப்புகளோ அல்லது காயங்களோ இன்றி நடந்த இந்தத் தாக்குதல் முறியடிப்பு நடவடிக்கை எந்த கப்பலுக்கும் சேதமின்றி நடைபெற்றது. (நி-5-6)

# எப்போ...

# சுவீடன்...

**(ஸ்டாக்ஹோம்) —**
**ரஷ்யா, தங்கள் மீ...**
**மானாலும் போர் ...**
**அச்சத்தில் சுவீடன் ...**
**தயாராகிவருவதாக ...**
**செய்தி வெளியிட்டுள்...**



உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததால் தங்களுக்கும் பிரச்சினை ஏற்படக்கூடும் என்று கருதி நேட்டோ அமைப்பில் சேர சுவீடன் தயாரானது. ஆனால்,

# பிரான்ஸ் பி...

## கேப்ரியல் அட்...



(பாரிஸ்)

பிரான்ஸ் பிரதமராக இருந்த எலிசபெத் போர்ன், தனது பதவியை ராஜினாமா செய்த நிலையில் வெற்றிடமாக இருந்த அந்த பதவிக்கு 34 வயதான கேப்ரியல் அட்டல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி யான இமானுவேல் மேக் ரான் மீது சமீப காலமாக அந்நாட்டு மக்கள் அதிரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாது வேண்டுமானாலும் ரஷ்யா
# ன் மீது போர் தொடுக்கலாம்

**மீது எப்போது வேண்டு ர் தொடுக்கலாம் என்ற ர் போரை எதிர்கொள்ளத் ாக சர்வதேச ஊடகங்கள் ள்ளன.**





ர் ம் று ர ல்.

அதன் முடிவு ரஷ்யாவுக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

ரஷ்ய ஜனாதிபதி புடின், நேட்டோ அமைப்பை ரஷ்யாவுக்கு அச்சுறுத்தலாகப் பார்க்கிறார். ஆகவே, நேட்டோவில் மேலும் மேலும் நாடுகள் சேர்ந்து அந்த அமைப்பை வலுப்படுத்துவது அவருக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக, ரஷ்ய எல்லையிலுள்ள சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகள் நேட்டோவில் இணைவது தனது நாட்டுக்கு ஆபத்து என அவர் கருதுகிறார்.

ஆகவே, சுவீடன் நேட்டோ அமைப்பில் இணைய முயன்று வருவதால், சுவீடன் மீது கோபத்திலிருக்கிறார் புடின்.

ரஷ்யா, உக்ரைனைத் தொடர்ந்து, தங்கள் மீது எப்போது வேண்டுமானாலும் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் உருவாகியுள்ளதால், மக்கள் போருக்குத் தயாராக இருக்குமாறு மூத்த சுவீடன் அதிகாரிகள் மக்களை வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்நிலையில், சுவீடன் பாதுகாப்புத்துறை அமைச்சரும், உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போர் சுவீடனுக்கும் வரலாம் என்று கூறியுள்ளதால் சுவீடனில் பெரும் பரபரப்பு உருவாகி வருகிறது. (நி-5-6)

## பிரதமராக
## ட்டல் நியமனம்



ப்தியில் உள்ளதாக தகவல்கள் வந்தன.

இந்த நிலையில் அந்நாட்டு பிரதமராக இருந்த எலிசபெத் போர்ன், தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதனை தொடர்ந்து கல்வி அமைச்சர் கேப்ரியல் அட்டலை பிரதமராக ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் நியமித்துள்ளார். (நி-5-6)

## நிலநடுக்கத்தால் அதிகரிக்கும் உயிரிழப்பு

(டோக்கியோ)

ஜப்பானில் புத்தாண்டு அன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 200 ஆக அதிகரித்துள்ளது. இன்னும் பலர் மாயமாகியுள்ளனர்.

இந்நிலையில் மீண்டும் நேற்று முன்தினம் பிற்பகல் 2.29 மணியளவில் 6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இந் நிலநடுக்கத்தில் கட்டங்களை குலுங்கியதால் பொது மக்கள் வீதியில் தஞ்சமடைந்திருந்தனர். (நி-5-6)



## தாமரை வடிவிலான செயற்கைக்கோளை விண்ணில் செலுத்திய சீனா



(பீஜிங்)

தாமரை வடிவிலான புதிய வானியல் செயற்கைக் கோளை சீனா விண்ணில் செலுத்தியுள்ளது.

ஜன்ஸ்மன் புரோப் என்ற இந்த செயற்கைக்கோள், லாங் மார்ச்-2சி என்ற ரொக்கெட் மூலம் தென் மேற்கு சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் உள்ள ஜிசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து ஏவப்பட்டுள்ளது.

புதிய எக்ஸ்ரே கண்டறிதல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த செயற்கைக்கோள், வானியல் நிகழ்வுகளை படம்பிடிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரபஞ்சத்தில் வான வேடிக்கைகளைப் போல ஒளிரும் மர்மமான நிலையற்ற நிகழ்வுகளைக் கண்காணிப்பதற்காக இந்த செயற்கைக் கோள் சுமார் 1.45 தொன் எடை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

மலர்ந்த தாமரை போல வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் செயற்கை கோளில் 12 இதழ்கள் மற்றும் இரண்டு மகரந்த தண்டுகள் போன்ற அமைப்புகள் உள்ளதுடன் அதில் 12 இதழ்களும் நீண்ட தொலைவை கண்காணித்து படம் பிடிக்கும் எக்ஸ்-ரே தொலைநோக்கிகள் கொண்ட 12 தொகுதிகளாகும்.

இதேவேளை இரண்டு தண்டுகள் போன்ற அமைப்பில் குறுகிய தொலைவை கண்காணிக்கும் எக்ஸ்-ரே தொலைநோக்கிகள் உள்ளன. இந்தப் பூமியையும் தாண்டி விண்வெளியில் நடைபெறும் வித்தியாசமான பல நிகழ்வுகளை கண்காணிப்பதே இதன் முக்கிய நோக்கம் என சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வெசும பயனாளிகளை அதிகரிக்க நடவடிக்கை

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

அஸ்வெசும பயனாளிகளின் எண்ணிக்கையை 24 இலட்சமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் கடினமான பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் இது தொடர்பான பிரேரணை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரச வங்கிகளின் பிரதிநிதிகளுடன் அஸ்வெசும திட்டத்தை மேலும் வினைத்திறனாக முன்னெடுப்பது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து நிதியமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

20 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட அஸ்வெசும நலத்திட்ட உதவிகளால் தற்போது 14 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெறப்பட்ட 11 லட்சத்திற்கும் அதிகமான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளில் கிட்டத்தட்ட 60% பரிசீலிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனவரி 31 இற்கு முன்னர் அந்த பணிகள் முடிக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அஸ்வெசும நலன்புரி திட்டத்திற்கான புதிய விண்ணப்பங்கள் கோரல் ஜனவரி மாத இறுதியில் அல்லது பெப்ரவரி முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என்றும் மேலும் 4 இலட்சம் பேர் நலன்புரிச் செயற்பாட்டில் உள்வாங்கப்படுவார்கள் என்றும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார். (நி-5-6)

# மண்மேடு சரிந்து விழுந்து பதுளையில் 4 வாகனங்கள் சேதம்



(பண்டாரவளை)

பண்டாரவளை, உடுஹூல்பொத்த பகுதியில் பண்டாரவளை-பதுளை பிரதான வீதிக்கு மேலே உள்ள மண்மேடு சரிந்து வீதியில் விழுந்ததில் நான்கு வாகனங்கள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இரு வாகனங்கள் முழுமையாக மண்ணுக்குள் புதையுண்டுள்ளதுடன் இரு வாகனங்கள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

நேற்று முற்பகல் 10 மணியளவிலேயே இந்த மண்சரிவு சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இரு சொகுசு வாகனங்கள், வான் மற்றும் ஆட்டோ இவ்வாறு மண்சரிவில் சிக்குண்டு சேதமடைந்துள்ளன.

இவ் அனர்த்தத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6)

# பாடப்புத்தக விநியோகம் விரைவில் பூர்த்தி செய்யப்படும்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை பாடப்புத்தக விநியோகம் விரைவில் பூர்த்தி செய்யப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய கல்வி தவணை ஆரம்பிக்கும் முன்னர் பாடப் புத்தக விநியோகம் பூரணப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# இன்று ஒரு தகவல்



## நம்பிக்கை

“நம்ம கையிலே என்ன இருக்கு! எல்லாம் ஆண்டவன் செயல்” அப்படி என்று சொல்லிக்கொண்டே காலம் தள்ளுறவர்கள் சில பேர்! “இதோ பாருங்க நீங்க யாரையுமே நம்பாதீங்க! உங்களையே நம்புங்க! சொந்தக் காலில நில்லுங்கள்! அதுதான் நல்லது!” என்று சொல்லுறவர்கள் சில பேர்.

இது இரண்டில் எதை நம்புவது என்று தெரியாமல் குழப்பத்திலேயே காலத்தை ஓட்டி முடிக்கிறவர்கள் நிறையப் பேர். நடக்கிறது எல்லாம் “விதி” யோட கையில் இருக்கா? நம் கையில் இருக்கா?

ஒரு பெரியவர் சொல்லுகிறார் எல்லாத்துக்கும் விதியையே நம்பிக்கொண்டு இருக்கக் கூடாது, சொந்த முயற்சியும் வேணும்!

இப்ப உதாரணத்துக்கு... நாங்கள் காசிக்குப் போகணும் என்று வைத்துக் கொள்ளுங்கள்!

ரயிலில போகணும். ரயில் நேரப்படி புறப்பட்டு அது பாட்டுக்கு புறப்பட்டுப் போய்க்கொண்டே இருக்கும்.

அது புறப்படுகிற நேரத்துக்குள்ளே அதைப் போய் பிடிக்க வேண்டியது நாமதான்!

ரயில் எங்களுடைய வீட்டு வாசலிலே வந்து நின்று எங்களை தூக்கி வைத்துக்கொண்டு போய் காசியில் இறக்கி விடாது. இறக்கி விட்டுட்டு “பத்திரமாகப் போய் கங்கையில் குளித்துவிட்டு வாங்க! உங்களை மறுபடியும் தூக்கிக் கொண்டு போய் உங்கள் வீட்டிலேயே விட்டுவிடுகிறேன் என்று சொல்லாது.

ரயில் அதுக்கென்று போட்டிருக்கிற தண்டவாளத்தில் அது பாட்டுக்கு போய்க்கொண்டே இருக்கும்.

எந்த நேரத்தில எந்த இடத்தில அதைப்போய் பிடிச்சு ஏறவேண்டுமோ அது உங்கள் கையிலதான் இருக்கு!

ரயில்தான் விதி! அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு போய்ச்சேர வேண்டிய இடத்துக்குப் போகிறோமே அதுதான் மனித முயற்சி.

எல்லாம் விதிப்படி நடக்கும் என்று சொல்லிக்கொண்டு பரீட்சை எழுதாமல் நீங்கள் வீட்டிலேயே இருந்தால் பாஸ் பண்ணுறது எப்போ?

ஒரு ஆள் அவனுக்கு எப்பவுமே தன்மேல் நம்பிக்கை கிடையாது. அவன் ஒரு தடவை மெட்ராஸில் இருந்து புறப்பட்டு விழுப்புரத்துக்குப் போகிறான்.

ரயிலில் தான் போகிறான். எக்மோர்லே இரவு 9 மணிக்கு புறப்படும் ஒரு ரயில்!

சரியான நேரத்திற்கு எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போய் விட்டான். ரயில் நின்றுகொண்டிருந்தது. கூட்டம் அதிகம். ஏறினான். மேலே ‘பர்த்’லே கொஞ்ச இடம் அதன் மேல் ஏறிப் படுத்துவிட்டான்.

அவன் விழுப்புரத்தில் இறங்கணும்! ஆனால் தூங்கிப் போய்விடுவோம் என்ற பயம்! கீழ் சீட்டில் சில பேர் இருந்தார்கள். அதில் ஒருவரிடம் சேர் நீங்க எந்த இடத்துக்குப் போகணும் என்று கேட்டான்.

நான் தஞ்சாவூருக்குப் போகிறேன் என்றார். சேர் நீங்க அப்படியே எனக்கு ஒரு உதவி செய்யணும் என்றான். சொல்லுங்க என்றார் அவர்.

சேர் நான் விழுப்புரம் இறங்க வேண்டியவன். அதனால விழுப்புரம் வந்தவுடன் என்னை இறக்கி விடுங்கள் என்றான்.

ஏன் உங்களுக்கு விழுப்புரம் தெரியாதா என்று கேட்டார். அப்படி இல்லை. நான் தூங்கிவிடுவேன். தூங்கினால் முழிக்கிறது எனக்கு ரொம்ப கஷ்டம் என்றார்.

அப்படி என்றால் விழுப்புரம் வந்ததும் நான் உங்களைத் தட்டி எழுப்புறன்... நீங்க எழும்பவில்லை என்றால் என்ன செய்யிறது என்றார்.

சேர் அதுக்காக நீங்க கொஞ்சமும் கவலைப்படாதீங்க! எழுப்பிப் பாருங்க... எழும்பவில்லை என்றால் எப்படியாவது என்னை உருட்டியாவது பிளாட்பாரத்தில தள்ளிவிடுங்கள் மறந்து விடாதீங்க என்றான்.

இவரும் சரி என்று சொல்லிவிட்டார். ரயில் புறப்பட்டது. எல்லோரும் தூங்கிட்டாங்க. காலையில் ரயில் தஞ்சாவூர் ஸ்டேசனில் போய் நின்றது.

தஞ்சாவூரில் இறங்க வேண்டியவர் இறங்கி பிளாட் பாரத்தில் நின்றார். திடீரென்று வந்து அவரின் கையைப் பிடிச்சான் அந்த ஆள். அதுதான் விழுப்புரத்தில இறங்க வேண்டியவன் தூங்கிக்கொண்டே தஞ்சாவூருக்கு வந்துட்டான் அவனுக்கு ரொம்ப கோபம்.

என்ன சேர் இது...? நான் மெட்ராஸ்லேயே படித்து படித்துச் சொன்னேன்! விழுப்புரம் வந்ததும் என் உருட்டியாவது பிளாட்பாரத்தில் தள்ளிவிடுங்க என்று இப்ப நான் தஞ்சாவூருக்கு வந்து விட்டேனே...

இந்த நேரம் நான் கண்டிப்பாக விழுப்புரத்தில் இருந்தே ஆக வேண்டும் சேர். இப்படிப் புலம்ப ஆரம்பிச்சிட்டான். அந்த தஞ்சாவூர்க்காரர் இதைச் சரியாக கவனிக்காமலேயே எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார். அதைப் பார்த்ததும் அவனுக்கு இன்னமும் கோபம்.

என்ன சேர் நான் பாட்டுக்கு கத்திக்கொண்டே இருக்கிறேன். நீங்கள் பாட்டுக்கு எதையோ யோசித்துக்கொண்டே இருக்கிறீங்க என்றான்.

அதுக்கு அவர் சொன்னார்... அதுக்கு இல்லையப்பா... தவறுதலா தஞ்சாவூருக்கு வந்த நீயே இவ்வளவு சத்தம் போடுறியே... தவறுதலாக நான் விழுப்புரத்தில் ஒருத்தனை வெளியே உருட்டி விட்டேனே அவன் இந்நேரம் என்ன சத்தம் போட்டுக்கொண்டிருப்பான் என்று யோசித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்.

‘இன்னொருத்தரை நம்பினால் இப்படித்தான் சேர். சரி... “நம்பிக்கையைப் பற்றி நான் சொல்ல வருவது என்ன என்றால்... இந்த உலகத்திலே நம்மை மீறிய செயல்களும் உண்டு.

நம்மால் முடியக்கூடிய செயல்களும் உண்டு. இது இரண்டையும் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு சாமர்த்தியமாக வாழ வேண்டியது எங்களுடைய கடமை.

தென்கச்சிக்கோ சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளங்கள் வான் பாய்ந்ததால் குன்றும் குழியுமான வீதிகள்

## செப்பனிடுமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த பெருமழையின் போது பல வீதிகள் குன்றுங் குழியுமாக மாறி உள்ளன. இரணைமடுக் குளம், கல்மடுக் குளம், புதுமுறிப்புக் குளம், பிரமந்தனாறுக் குளம், கனகாம்பிகைக் குளம், அக்கராயன் குளம், வன்னேரிக் குளம், குடமுருட்டிக் குளம், கரியாலைநாகபடுவான் குளம் உட்பட மாவட்டத்தின் சிறிய, பெரிய குளங்கள் நிரம்பி வழிந்ததால் வான் வெள்ளம் வீதிகளைக் குறுக்கறுத்து பாய்ந்தது.



அதனால் முதன்மை வீதிகளும் உள்ளக வீதிகளும் பல இடங்களில் குன்றுங் குழியுமாக மாறி உள்ளது.

இதன் காரணமாக போக்குவரத்து செய்வதில் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

தற்காலிகமாக வீதிகளில் உள்ள பெருங் குழிகளை மூடி மக்களின் போக்குவரத்திற்கு வழி செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-5-6-350)

# இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளில் முறைகேடு

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளில் முறைகேடு இடம் பெறுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகள் சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டே வெட்டுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது எனவும் அவற்றில் சிறிய கன்றுகளையும் இறைச்சிக்கு வெட்டுவதற்கு அனுமதிக்கப்படுவதாக தகவல்கள் கிடைக்கபெற்றிருந்தது.

அதனையடுத்து குறித்த விடயம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளரிடம் வினவியபோது இறைச்சிக்காக வெட்டுவதற்கு கொண்டுவரப்படும் மாடுகள் 24 மணித்தியாலம் பிரதேசசபையில் கட்டப்பட்டு அவற்றை புதுக்குடியிருப்பு சுகாதார பணிமனை சுகாதார பரிசோதகர்கள், கால்நடை வைத்தியர் பார்வையிட்டு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இறைச்சிக்கு வெட்டப்படுகின்றது எனவும் பார்ப்பதற்கு கன்று போல் தெரிந்தாலும் மாட்டின் பல்லை வைத்தே வயது உறுதிப்படுத்தப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சுகாதார பரிசோதகரிடம் வினவிய போது ஐந்து மாடுகள் பிரதேச சபையில் கட்டப்பட்டு இருப்பதாகவும் அதில் இரண்டு மாடுகளுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர். (நி-5-6-299)

# முள்ளியவளை வர்த்தக நிலையமொன்றில் தீப்பரவல்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தண்ணீரூற்று முள்ளியவளை பகுதியில் புடவையகத்தோடு கூடிய இலத்திரனியல் பொருட்கள் திருத்தகம் ஒன்றில் நேற்று அதிகாலை தீ பரவியுள்ளது

திடீரென தீ ஏற்பட்டதை அவதானித்த அருகில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்று கூடி குறித்த வர்த்தக நிலையத்தில் பரவிய தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்

இருப்பினும் குறித்த தீப்பரவல் காரணமாக வர்த்தக நிலையத்தில் இருந்த பல இலட்சம் பெறுமதியான உடைமைகள் முற்று முழுதாக எரிந்து அழிவடைந்துள்ளன.

எவ்வாறு குறித்த தீ ஏற்பட்டது என்பது தொடர்பிலான விசாரணைகளையும் மேலதிக விசாரணைகளையும் முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-299-350)

# ஜெயபுரம் கிராம மக்களின் வயல்களை முழுமையாக விடுவிக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்ட ஜெயபுரம் கிராம மக்களுக்குரிய வயல் நிலங்களை முழுமையாக விடுவிக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1983 ஆம் ஆண்டில் தேவன் குளத்தின் கீழ் 550 ஏக்கர் வரையான வயல் நிலங்கள் இக்கிராம மக்களுக்கு ஒதுக்கப்பட்டது.

இக் கிராமத்தில் 480 குடும்பங்கள் வசிக்கின்றனர். போர்ச் சூழல் காரணமாக குறித்த வயல் காணிகள் இக்கிராம மக்களினால் துப்புரவு செய்ய முடியவில்லை.

மீள் குடியேற்றத்தின் பின்னர் 2010 ஆம் ஆண்டில் இருந்து தமது வயல் நிலம் விடுவிக்கப்பட வேண்டும் என மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் ஆகியவற்றின் முன்பாக ஜெயபுரம் மக்கள் போராட்டம் நடத்தியதுடன் கூட்டங்களில் மனுக்களையும் கையளித்திருந்தனர்.

கடந்த 14 வருடங்களில் 130 ஏக்கர் வரையான நிலப்பரப்பே விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய வயல் நிலம் வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளது.

தற்போது தேவன்குளம் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் குறித்த வயல் நிலக் காணியினை முழுமையாக விடுவித்து பயிர்ச் செய்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜெயபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

# மன்னார்-மதவாச்சி பிரதான வீதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கை



(மன்னார்)

மன்னார் -மதவாச்சி பிரதான வீதி, குஞ்சுக்குளம் பிரதான சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் மாலை போதைப்பொருள் தொடர்பான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.


மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபால ஹேரத் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகே தலைமையில் மடு பொலிஸ் பிரிவில் உள்ள குஞ்சுக்குளம் சோதனைச் சாவடியில் குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மன்னாரில் இருந்து சென்ற வாகனங்கள், மற்றும் பரய நாளன்குளம் வீதியூடாக மன்னார் நோக்கி பயணித்த சகல வாகனங்களும் மோப்ப நாயின் உதவியுடன் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. (நி-5-6-285)

# கட்டுவன் ஐயப்பன் தேர்த்திருவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் கரண்டைக்குளம் ஸ்ரீ சபரிகிரி ஐயப்பன் தேவஸ்தான வருடாந்த தேர்த் திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து தேரில் பவனி வரும் காட்சி இடம்பெறவுள்ளது. (நி-5-6)



மலையக தியாகிகளின் நினைவுதினம் நேற்று யாழ்ப்பாண பல்கலைக்கழக பொதுத் தூபியில் ஈகைச் சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தி அனுஷ்டிக்கப்பட்டது.

# சுண்டிக்குள உப அஞ்சல் அலுவலகம் மாற்றப்படுவதற்கு மக்கள் எதிர்ப்பு

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி மருதங்கேணி பிரதேசத்திற்குட்பட்ட போக்கறுப்பு கிராம சேவகர் பிரிவில் இயங்கி வந்த சுண்டிக்குளம் உப அஞ்சல் அலுவலகம் மாற்றப்படுவதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் போக்கறுப்பு கிராம சேவையாளர் பிரிவில் இயங்கி வந்த சுண்டிக்குளம் உப அஞ்சல் அலுவலகத்தை போதிய வருமானம் இன்மை என்னும் அடிப்படையில் வேறு ஒரு பிரதேசத்திற்கு மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

தரமான வீதிகள் இன்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளால் நாளாந்தம் துன்பப்படும் எமக்கு இதுவரை காலமும் உதவியாக இருந்த சுண்டிக்குளம் உப அஞ்சல் அலுவலகமும் இல்லை என்றால் பல்வேறு இன்னல்களை சந்திப்போமெனவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

எந்த சந்தர்ப்பத்திலும் குறித்த பிரதேசத்தை விட்டு சுண்டிக்குள உப அஞ்சல் அலுவலகம் மாற்றம் செய்யப்படுவதை தாம் அனுமதிக்க போவதில்லை என அப்பகுதி மக்கள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர். (நி-5-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 375





இவ்வளவு பெருந்தன்மையான காரியங்களைச் செய்யக் கூடியவர் அவர்தான். ஆனால் இப்போது அவர் எங்கே இருப்பார்? அவரைத் தேடிப் பிடிப்பது சாத்தியமா? இந்த வைஷ்ணவனோடு இவ்வளவு கஷ்டத்துடன் பிரயாணம் செய்து வந்தது வீணாகி விடுமோ?"

"தம்பி! பார்த்தாயா?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"பார்த்தேன்."

"என்ன தெரிந்தது?"

"சீன யாத்திரீகர்களின் முகம் சப்பையாகத் தெரிந்தது அவர்களுடைய உடை விசித்திரமாயிருந்தது."

"யாத்திரீகர்களைப் பற்றி நான் கேட்கவில்லை."

"பின்னே?"

"யானைப் பாகனைக் கவனித்துப் பார்த்தாயா?', என்று கேட்டேன்."

"யானைப் பாகனையா? நான் கவனிக்கவேயில்லையே?"

"அழகாயிருக்கிறது. அந்த யானைப் பாகனுடைய பார்வை தற்செயலாக நம் பேரில் விழுந்ததும் அவனுடைய கண்களில் ஜொலித்த ஒளியைக் கவனிக்கவில்லையா?"

"அது என்ன? யானைப் பாகனுடைய கண்களில் தீவர்த்தி போட்டிருக்கிறதா ஜொலிப்பதற்கு?"

"நல்ல ஆள் நீ! உன் அஜாக்கிரதையை நினைத்து ஆச்சரியப்படுவதா அல்லது இவ்வளவு முக்கியமான காரியத்தை உன்னை நம்பி ஒப்புவித்து அனுப்பினாளே, அந்த இளைய பிராட்டியின் காரியத்தைக் குறித்து ஆச்சரியப் படுவதா என்று தெரியவில்லை போனாற் போகட்டும். என்னோடு வா!"

யானைக்கும் யானையைச் சூழ்ந்து நின்ற கூட்டத்துக்கும் பின்னால் சற்றுத் தூரத்தில் இவர்களும் தொடர்ந்து போனார்கள்.

புத்த விஹாரத்தின் வாசலில் வந்ததும் யானை நின்றது. பிறகு யானைப் பாகன் ஏதோ சொல்லவும் யானை மண்டியிட்டுப் படுத்தது. யாத்திரீகர்கள் இறங்கினார்கள். புத்த விஹாரத்தின் வாசலில் கும்பலாக நின்ற புத்த பிக்குக்கள் சீன யாத்திரீகர்களை வரவேற்றார்கள். சங்கங்கள் முழங்கின் ஆலாட்ச மணிகள் ஒலித்தன. விஹாரத்தின் மேன் மாடத்திலிருந்து மலர் மாரி பொழிந்தது. "புத்தம் சரணம் கச்சாமி" என்ற கோஷம் வானளாவியது. சீன யாத்திரீகர்கள் இருவரும் விஹாரத்துக்குள் சென்றார்கள். கூட வந்தவர்களிலும் பெரும்பாலோர் அவர்களைத் தொடர்ந்து விஹாரத்துக்குள்ளே சென்றார்கள்.

யாத்திரீகர்கள் இறங்குவதற்கு முன்பே யானையின் கழுத்திலிருந்து இறங்கிவிட்ட யானைப் பாகன் யானையை எழுப்பி நடத்திக்கொண்டு சென்றான். சற்றுத் தூரத்தில் நின்றிருந்த நாலுபேரைப் பார்த்தான். அவர்களில் ஒருவனிடம் யானையை ஒப்புவித்தான். இன்னும் ஒருவனிடம் ஆழ்வார்க்கடியானைச் சுட்டிக்காட்டி ஏதோ சொன்னான். மற்ற இருவரையும் அழைத்துக்கொண்டு சிறிது நேரத்தில் வீதியின் ஒரு திருப்பத்தில் திரும்பி மறைந்தான்.

யானைப் பாகன் எந்த ஆளுக்கு ஆழ்வார்க்கடியானைச் சுட்டிக்காட்டினானோ அவன் இவர்கள் நின்ற இடத்தை நோக்கி வந்தான். ஆழ்வார்க்கடியானிடம் மெல்லிய குரலில், "ஐயா! என்னுடன் வருவதற்குச் சம்மதமா?" என்று கேட்டான்.

"அதற்காகவே காத்திருக்கிறோம்" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அடையாளம் ஏதாவது உண்டா?"

சேனாதிபதி கொடுத்திருந்த கொடும்பாளூர் முத்திரை மோதிரத்தை ஆழ்வார்க்கடியான் காட்டினான்.

"சரி, என் பின்னால் வாருங்கள்" என்று சொல்லிவிட்டு அவன் முன்னால் செல்ல, இவர்கள் பின்தொடர்ந்து சென்றார்கள். ஊரைத் தாண்டி அப்பால் சென்றதும் குறுகிய காட்டுப் பாதை ஒன்று தென்பட்டது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முல்லாவும் மூன்று அறிஞர்களும்



நம்ம முல்லா நஸ்ருதீன் இருந்த நாட்டில் நிறைய கல்வி கற்ற அறிஞர்கள் இருந்தார்கள். அவர்களோடு மற்ற நாட்டு அறிஞர்கள் போட்டி போடுவார்கள். அதனால் மக்களுக்கு நல்ல நல்ல விடயங்கள் தெரிய வரும். சில நேரங்களில் போட்டி கடுமையாக இருக்கும். வெற்றி பெற்றவருக்கு பட்டமும் பணமும் கிடைக்கும்.

ஒருமுறை மூன்று மெத்த படித்தவர்கள், எல்லாமே தெரிந்தவர்கள் என்று மனதில் நினைத்துக் கொண்டு, அடுத்தவர்கள் பதில் சொல்ல முடியாத அளவுக்கு கேள்வி கேட்பார்கள். அவர்கள் போட்டிக்கு அழைத்தாலே, ஏன் வீணாக அவமானப்பட வேண்டும் என்று நினைத்து நிறைய பேர் போட்டியை புறக்கணிப்பார்கள்.

அப்படிப்பட்ட அந்த மூன்று பேரும் நம்ம முல்லா இருந்த நாட்டிற்கு வந்து அரசனிடம் எங்களுடன் போட்டி போட உங்கள் நாட்டில் புத்திசாலிகள் இருந்தால் வரச் சொல்லுங்கள் என்றார்கள். உடனே அரசர் தன்னுடைய அரண்மனை அறிஞர்களைப் பார்க்க அவர்களோ தலையை தொங்கப் போட்டு விட்டார்கள். யாரும் போட்டி போட விருப்பம் தெரிவிக்கவில்லை.

உடனே அந்த மூன்று பேரும் சப்தமாக சிரித்து, உங்கள் நாட்டில் அனைவரும் முட்டாள்களா? எங்களுடன் போட்டி போட யாருமே இல்லையா? ஹா ஹா, அப்படியே போட்டி போட்டு எங்களை வென்றால் நாங்கள் இந்த நாட்டுக்கு அடிமை, இல்லை என்றால் நீங்கள் அனைவரும் எங்களுக்கு அடிமை. போட்டிக்கு தயாரா? என்று கிண்டலாக கேட்க, அரசனுக்கு அவமானம் தாங்க முடியவில்லை.

நாளை நாட்டின் நடுவில் இருக்கும் ஒரு இடத்தில் போட்டி நடைபெறும் யார் வேண்டும் என்றாலும் கலந்து கொள்ளலாம். இந்த மூன்று பேரையும் வெற்றி கண்டால் நிறைய பரிசுகள் கிடைக்கும். இல்லை என்றால் கடுமையான தண்டனை என்று அறிவிப்பு செய்தார். அன்றைய இரவே புத்திசாலிகள் என்று சொல்லித் திரிந்த நிறைய பேர் ஊரை விட்டு போய் விட்டார்கள்.

அடுத்த நாள் காலையில் அங்கே நிறைய மக்கள் கூடி இருந்தார்கள். அவர்களோடு போட்டி போட்டு தோற்றவர்கள் தலை குனிந்து நின்று கொண்டிருந்தார்கள். யாருமே அவர்களை வெற்றி கொள்ள முடியவில்லை என்ற ஆத்திரத்தில் அரசன் அமர்ந்திருந்தான்.

அந்த பக்கமாக நம்ம முல்லா பக்கத்து நாட்டில் வியாபாரம் செய்து முடித்து தன்னுடைய கழுதையுடன் ஊருக்கு வந்தார் என்னடா இங்கே இவ்வளவு கூட்டமாக இருக்கிறதே என்று வேடிக்கை பார்த்தவருக்கு பயங்கர அதிர்ச்சி. அவரது மச்சான் வேறு கையை கட்டி தலை குனிந்து நின்று கொண்டிருந்தான்.

மக்களிடம் என்ன ஏது என்று கேட்டு தெரிந்து கொண்டார். மச்சானின் தொந்தரவு இனி இருக்காது என்று நினைத்தார். சிறிது நேரத்திலேயே தன் நாட்டு மக்கள் யாருமே பதில் சொல்லவில்லை. அப்படி செய்தால் தன் நாட்டிற்கு பெருத்த அவமானம் ஆகுமே என்று நினைத்ததோடு இல்லாமல் இந்த அறிஞர்களுக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என்று நினைத்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் இறைவன் உறைகிறான்; அவன்தான் மனச் சான்று.

~ மினாண்டர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நன்றி மறந்த ஈனத்தனங்களுக்கு பழக்கப்பட்ட நம் தமிழ் மண்

இந்தியாவில் இராமபிரானின் ஜென்ம பூமியாகிய அயோத்தியில் அமைக்கப்பட்ட அயோத்தி இராமர் கோயில் கும்பாபிஷேகம் 2024 ஜனவரி 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஆயிரம் கோடி இந்திய ரூபாய் பெறுமதியில் அமைக்கப்பட்ட இராமர் கோயில் 70 ஏக்கர் நிலப்பரப்பில் அமையப் பெற்றுள்ளது.

இதுதவிர, இராமபிரானின் ஜென்ம பூமியாகிய அயோத்தியில் அமைந்திருந்த இராமர் ஆலயத்தை இஸ்லாமிய மன்னர் படையெடுத்து அழித்ததோடு அவ்விடத்தில் பாபர் மசூதியைக் கட்டுவித்தனர்.

இராம ஜென்ம பூமி ஆலயத்தை உடைக்காமல் பாதுகாப்பதற்காக அயோத்தியின் பூர்வீகக் குடிகளாகிய சூரிய வம்ச சத்திரியர்கள் இஸ்லாமிய மன்னர்களை எதிர்த்துப் போராடினர்.

எனினும் அவர்களின் வீரம் செறிந்த போரை மீறி, இஸ்லாமிய மன்னர்கள் அயோத்தி இராமர் ஆலயத்தை இடித்தழித்தனர்.

இதனால் துன்பப்பட்ட அயோத்தியைச் சேர்ந்த சூரிய வம்ச சத்திரியர்கள், மீண்டும் இராமர் கோயில் அமைக்கப்படும்வரை தாம் தலைப்பாகை, பாதணி என்பவற்றை அணிவதில்லை என்றும் குடை பிடிப்பதில்லை என்றும் சபதம் செய்தனர்.

அன்று அவர்கள் செய்த சபதத்தை சுமார் 500 ஆண்டுகள் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர்.

இந்த ஆச்சரியமான செய்திக்குள் அந்த சூரிய வம்சத்தினரின் மன உறுதி எத்துணை என்பது புரிதற்குரியது.

இது ஒருபுறமிருக்க, இம்மாதம் 22ஆம் திகதி அயோத்தி இராமர் ஆலய மகா கும்பாபிஷேகம் இடம்பெற இருப்பதை ஒட்டி சூரிய வம்ச சத்திரியர்கள் தமது சபதத்தை நிறைவு செய்து தலைப்பாகை அணியவுள்ளனர்.

500 ஆண்டுகளுக்குப் பின்னர் சூரிய வம்சத்தினர் அணிவதற்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தலைப்பாகைகள் தயாரிக்கப்பட்டு கிராமம் கிராமமாக வழங்கப்படுகிறது.

ஆம், 500 ஆண்டுகளுக்குப் பின்னர் இராம ஜென்ம பூமியில் இராமரின் ஆலயம் அமையப் பெற்று குடமுழுக்கு இடம்பெறுவதென்பது இயற்கையின் நியதியை எடுத்துக் காட்டுகிறது.

இதைக்கூறும்போதுதான், எங்கள் ஈழத்து சைவத் தமிழ் மக்கள் பற்றி எண்ணத் தோன்றுகிறது.

ஆம், இலங்கையைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதோடு யாழ்ப்பாணத்தில் இருந்த சைவாலயங்களை இடித்து அழித்தனர்.

தவிர, அந்த இடத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களை அமைத்தனர். இதனால் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்தனர்.

எனினும் போர்த்துக்கேயரால் சைவாலயம் அழிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் தங்களின் ஆலயத்தை அமைக்க வேண்டும் என சைவ மக்கள் கேட்கவில்லை.

ஆம், இன்னொரு வழிபாட்டு தலத்தை அழித்து போர்த்துக்கேயர் போல கீழ்த்தரமாக ஈழத் தமிழ் மக்கள் நடந்து கொள்ளவில்லை.

இந்த உண்மையை - அவர்களின் பெருந்தன்மையை உணராத சிலர்; போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண இராச்சியம் கைப்பற்றப்பட்டு, அவர்களால் அமைக்கப்பட்ட இந்த வழிபாட்டுக் கடவுளின் அடைக்கலத்துக்கு யாழ்ப்பாண இராச்சியம் ஒப்படைக்கப்பட்டது என விளம்பரம் செய்யும்போதுதான், அட போர்த்துக்கேயர் இந்த நாட்டைக் கைப்பற்றியதைப் பெருமையாகக் கூறுகின்றவர்களும் நம்மத்தியில் உள்ளனர் என்பதை உணர முடிந்தது.

பரவாயில்லை. நன்றி மறந்த ஈனத்தனங்களுக்கு நம் மண் பழக்கப்பட்டதுதானே பொறுத்துக் கொள்வோம்.

# நுகர்வோரை ஏமாற்றும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்யாமல், போலிப் பற்றுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி, இலாபம் ஈட்டும் வர்த்தக மாபியாக்களை முற்றாக நிறுத்துவதற்கு சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நிதியமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வற்வரி விழிப்புணர்வு கருத்தரங்கில், கலந்து கொண்ட நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் வரி சேகரிப்பு செயற்பாடுகளை விஸ்தரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், இதன் மூலம் நேரடி வரி வீதம் 40% ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

எத்தகைய பொருளாதார நிலையில் இருந்தாலும் ஒவ்வொரு நபருக்கும் இந்த காலகட்டம் மிகவும் கஷ்டமானது என்று சொல்ல வேண்டும். ஒவ்வொருவரினதும் வருமானம் குறைந்து, செலவுகள் அதிகரித்துள்ளதால், சிரமங்கள் எழுந்துள்ளன.

நாடு எதிர்நோக்கும் பிரச்சினையை புரிந்து கொண்டு அரசாங்கம் இதற்காக முன்னெடுக்கும் இந்த வேலைத்திட்டத்தைத் தவிர வேறு மாற்றுவழியில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப, அரசின் வருவாயை அதிகரிக்க வேண்டும். அதற்கான வரித் தளத்தை விரிவுபடுத்த அரசாங்கம் முயற்சியெடுத்து வருகிறது. இதுவரை 20% ஆக இருந்த நேரடி வரி விகிதத்தை படிப்படியாக 30% ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேரடி வரியை மேலும் 40% ஆக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. எதிர்காலத்தில் மறைமுக வரிகளின் சதவீதத்தை குறைக்கும் திறன் அரசுக்கு உள்ளது.

அத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யாமல் பாவனையாளர்களுக்கு போலி பற்றுச்சீட்டுக்களை வழங்கி, முறையற்ற விதத்தில் இலாபம் ஈட்டும் வர்த்தக மாபியாக்களை முற்றாகத் தடுக்கும் வகையில் சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய தெரிவித்தார். (ம-7)

# யாழ்ப்பாணத்தில் ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான இணையத்தளங்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான உத்தியோகபூர்வ இணையதளங்கள் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களால் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இந்த இணையதளங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வேலணை, வலிகாமம் மேற்கு, நெடுந்தீவு, வடமராட்சி தெற்கு, மேற்கு ஆகிய பிரதேச சபைகளுக்கும், பருத்தித்துறை நகர சபைக்குமான உத்தியோகபூர்வ இணைய தளங்களும் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டன.

மக்களுக்காக சேவை புரியக்கூடிய உள்ளூராட்சி நிறுவனங்கள் இவ்வாறு உத்தியோகபூர்வ இணையத் தளங்கள் ஊடாக தங்களின் பணிகளை மேற்கொள்ள எடுத்துள்ள முயற்சிக்கு ஆளுநர் பாராட்டுக்களை தெரிவித்தார். அத்துடன் பொதுமக்கள் தங்களுக்கான சேவைகளை இணையத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகளையும், வரி உள்ளிட்ட கட்டணங்களையும் இணையதளத்தினூடாக செலுத்துவதற்கான வசதிகளையும் மேம்படுத்த வேண்டும் என ஆளுநர் இதன்போது அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

இவ்வாறான சேவைகளை வழங்குவதன் மூலம் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன், பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும் என ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்கள் தங்களின் தனித்துவத்தையும் பேண முடியும் எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

ஆளுநரின் ஆலோசனைகளை செவிமெடுத்த அதிகாரிகள், அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள இணையத்தளத்தில்மேலும் தரவுகளை இணைத்து மக்கள்நேயப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி மன்ற ஆணையாளர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-7,33)

# கடமைகளை பொறுப்பேற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்கள்

(கொழும்பு)

அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைய புதிதாக நியமிக்கப்பட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நேற்று உத்தியோகப்பூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நியமனத்தை வழங்கியுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தலைமையிலான தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு எம்.ஏ.பி.சி. பெரேரா, அமீர் பாயிஸ், அனுசுயா சண்முகநாதன், லக்ஷ்மன் திஸாநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில் அவர்கள் நேற்று உத்தியோகப் பூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டுள்ளனர். (ம-7)

# டைனமைட் வெடித்ததில் கிண்ணியாவில் ஒருவர் மரணம்

கிண்ணியா -ஏழு புளியடி மீள்குடியேற்ற கிராமப் பகுதியில் டைனமைட் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை 6.30 மணிளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெரிய கிண்ணியா கட்டையாறு பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய உனைதீன் ரபாய்தீன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஏழுபுளியடியில் வசித்து வந்த இவரது மனைவி வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக குவைத்துக்குச் சென்று ஒன்றரை வருடங்களின் பின் மீண்டும் வீடு திரும்பி உள்ளார். வெளிநாட்டில் இருந்து வந்து ஐந்து நாட்களேயான நிலையில், இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள், ஏற்பட்டுள்ளன.

வெளிநாட்டில் இருந்து வந்த மனைவி தனது கணவனுடன் வாழ விருப்பமில்லை எனக் கூறியுள்ளார். இதன் காரணமாக மனம் சோர்வடைந்த கணவன், வெடித்து செத்துப் போவேன் என பலரிடம் கூறியுள்ளார்.

நேற்றுக் காலை 6.30க்கு தனது இடுப்பில் வெடிக்கும் டைனமைட் வெடிப் பொருளைக் கட்டிக் கொண்டு வெடிக்க வைத்து உயிரிழந்துள்ளார்.

இறந்தவரின் சடலம், ஏழுபுளியடி மேல் குடியேற்ற கிராமத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நடைமுறைப்படுத்த இருக்கும் மக்கள் சபைகள் (ஜனசபா)



08

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில், இலங்கையில் கிராம சபை முறைக்குப் பதிலாக உள்ளூராட்சி அமைப்பாக கிராமக் குழுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பின்னர், மாநகர சபைகள், சுகாதாரம் பேணல் சபைகள் மற்றும் சிறு நகரசபைகள் போன்ற உள்ளூராட்சி கட்டமைப்புகள் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டன.

1947 ஆம் ஆண்டிற்குப் பிறகும் உள்ளூராட்சியில் பங்கேற்பு ஜனநாயகத்தை மேலும் உறுதிப்படுத்துதல் மற்றும் உள்ளூராட்சியில் நிதி ஸ்திரத்தன்மை போன்ற பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. சோக்சி குழு அறிக்கை - 1955, ஜெயசூரிய குழு அறிக்கை - 1968, சிற்றம்பலம் குழு அறிக்கை - 1970, மொரகொட குழு அறிக்கை - 1979 மற்றும் விக்டர் தென்னக்கோன் குழு அறிக்கை - 1980 மற்றும் எச்.ஏ.பி. அபேவர்தன குழு அறிக்கை - 1986 என்பவை இவற்றுள் அடங்கும்.

மேலும், பிரித்தானியர் காலத்திலும் சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்திலும் கடந்த கிராம சபை முறை மற்றும் உள்ளூராட்சி முறைகளை. ஆராய்ந்ததன் மூலம் பங்கேற்பு ஜனநாயகத்தை வளர்ப்பதன் முக்கியத்துவம் "இலங்கையில் உள்ளூராட்சி சீர்திருத்தங்கள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை - 1999 இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றில் பங்கேற்பு ஜனநாயகத்தை நிறுவுவதற்கான ஒரு முக்கியமான முயற்சி மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டம் ஆகும். இது 01 ஜூலை 1981 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. "கிராமோதய மண்டலம்" மேற்படி சட்டத்தின் 17ஆவது பிரிவின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

"பிரதேச மண்டலம்" மற்றும் கிராமோதய மண்டலம் ஆகியவை, அடிமட்ட சமூகப் பங்கேற்பை மேம்படுத்துவதற்காக, மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு மேலாக (கூடுதலாக) நிறுவப்பட்டன. மேலும் 2016 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான மக்கள் பிர திநிதித்துவக்குழுவின் அறிக்கையில் "கிராம ராஜ்யம்/கிராமச் சபை" கருத்து விவாதிக்கப்பட்டுள்ளது.

இது குழு அறிக்கையின் 10.1.2 பிரிவின் கீழ் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "கிராம அளவில் நிர்வாகத்தின் பலவீனங்களை போக்குவதற்கும் ஜனநாயக அரசியல் கட்டமைப்பில் குடிமக்களின் நேரடி பங்கேற்பை மேம்படுத்துவதற்கும் கிராம மட்டத்திற்கு அதிகாரம் அளிக்க வேண்டியது அவசியம்." இங்கு முன்மொழியப்பட்ட கிராம அமைப்பின் நோக்கம், கிராம மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கத்தை அடைவதற்காக, முடிவெடுப்பதில் குடிமக்களின் செயலில் பங்கேற்பதன் மூலம் கிராம அளவிலான விவகாரங்களை நிர்வகிப்பதற்கான ஒரு தன்னாட்சி நிறுவன பொறிமுறையை அரசியலமைப்பு ரீதியாக நிறுவுவதாகும்.

மேலும் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் அனைத்து மட்டங்களிலும் அதிகார துஷ்பிரயோகத்திற்கு வழிவகுக்கும் கட்சி அரசியலில் ஊழல் மற்றும் உள்ளூர் அரசியலில் தீவிர அரசியல் மயமாக்கல் மற்றும் அதிகாரத்துவம் போன்ற காரணங்களால் இத்தகைய புதிய அரசியல் கட்டமைப்பு அவசியமானது.

இந்தக் குழுவின் அறிக்கையானது 'கம் சபா' தொடர்பாகப் பல முக்கியக் கோட்பாடுகள் மூலம் விவாதிக்கப்பட்டுள்ளது. கிராம மட்ட சமூக அமைப்பு உறுப்பினர்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் கிராம சபைகளின் கிராம ராஜ்ஜியக் கோட்பாட்டிற்கு அப்பாற்பட்டு அதிகாரப் பகிர்வின் இரண்டாம் அடுக்கு மற்றும் நிரப்பு கொள்கையிலிருந்து உண்மையான குடிமகன் ஜனநாயகத்தை நிறுவுவ தற்கான கோட்பாடுகள் விவாதிக்கப் பட்டுள்ளவற்றுள் அடங்கும்.

மேற்கூறிய விடயங்களை மையமாக வைத்து இலங்கையின் தற்போதைய உள்ளூராட்சி முறைமையில் உள்ள பங்கேற்பு ஜனநாயகத்தின் பற்றாக்குறையை போக்குவதற்கும் அதைவிட முற்போக்கான அம்சங்களுடன் ஸ்தாபிப்பதற்கும் பங்கேற்பு ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான ஒரு புதிய கட்டமைப்பாக கடந்த கிராம சபை முறை (கம்சபா முறை) கிராமிய ஜன சபையை இந்தக் கருத்தாடல் முன்மொழிகிறது.

இது கிராமத்தில் பரந்த பங்கேற்பு ஜனநாயகத்தை உறுதி செய்வதோடு சுற்றுப்புற மக்களுக்கு நிர்வாகத்தில் நுழைவதற்கான வாய்ப்பை வழங்கும். மேலும், தேசிய அளவிலான பங்கேற்பு ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையில் தற்போதுள்ள சட்டமன்றங்களுக்கு அவதானிப்புகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களை வழங்கும் வாரியமாக செயற்படும் வகையில் புதிய கட்டமைப்புகள் முன்மொழியப்பட்டுள்ளன.

மேலும், இந்த முன்மொழிவு அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுவதில் கவனம் செலுத்துகிறது. இனம், மதம், சாதி போன்ற காரணிகளின் அடிப்படையில் யாரையும் ஒதுக்கி வைக்காத போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் முறைகளை அறிமுகப்படுத்துதல். மேலும், இளைஞர்கள் மற்றும் பெண்களின் போதிய பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதில் இந்தக் எண்ணக்கருத்துத் தாள் அதிக கவனம் செலுத்தியுள்ளது.

### மக்கள் சபை (ஜனசபா) யாருக்காக?

இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு இலங்கையர்களுக்கும் ஜன சபை, குறிப்பாக சுற்றுப்புறத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள தொலைதூர கிராமங்களில் வசிக்கும் மக்களின் குரலைக் கட்டுப்படுத்துவதில் ஒரு தீவிரமான தலையீடு இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும், ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் அரசாங்கக் கொள்கைகள் மீதான குடியரசின் நிர்வாகத்தை செயற்படுத்துவதில் சுறுசுறுப்பான சமூக குடிமக்களின் பங்களிப்பை உறுதிசெய்ய இது பெரும் ஆதரவை வழங்கும். கொள்கை விடயங்களில் பொதுமக்களை தொடர்ந்து புதுப்பிக்கும் ஒரு பொறிமுறையாகவும் இது செயற்படுத்தப்படும்.

கிராமப் பிரச்சினைகள் மற்றும் கிராமம் தொடர்பான பொதுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தேசிய மட்டத்தில் கொள்கை உருவாக்கத்திற்கான மக்களின் கருத்துக்களை சமூகத்தின் நேரடி பங்கேற்புடன் தீவிரமாகப் பெறுவதற்கும் ஒரு பொறிமுறை உருவாக்கப்படும் என்பதை மேலும் சுட்டிக் காட்டலாம்.

### திட்டத்தின் பகுத்தறிவு

பிரதிநிதித்துவ ஜனநாயகம் தற்போது நடைமுறையில் இருக்கும் பல அதிகார கட்டமைப்புகள் உள்ள சூழ்நிலையில், இன்னொரு பங்கேற்பு மாதிரியின் நோக்கம் என்ன என்ற கேள்வி சில தரப்பினரிடமிருந்து எழுந்துள்ளது. எவ்வாறாயினும், சமீபத்திய பொது எதிர்ப்புகள் மற்றும் எழுச்சிகளில் வெளிப்பட்ட முக்கிய கோரிக்கைகளில் ஒன்று, மக்களின் உண்மையான குரலுக்கான தளத்தை உருவாக்கும் மற்றும் பிரதிநிதித்துவ ஜனநாயக மாதிரிகளுடன் ஒரே நேரத்தில் செயற்படும் ஒரு பங்கேற்பு ஜனநாயக மாதிரி அவசியம்.

அந்தச் சூழலில், பொதுக் கொள்கைகளை உருவாக்குவதற்கும் சமூகக் குடிமக்களின் செயலில் பங்கேற்பதன் மூலம் அந்தக் கொள்கைகளை வெற்றியடையச் செய்வதற்கும் மக்களின் உண்மையான குரலுக்குத் தேவையான பொறிமுறையை உருவாக்கும் நோக்கத்துடன் அந்த கொள்கைகளை செயற்படுத்துவதில் "ஜன சபை" என்ற கருத்து வெளிப்படுகிறது.

### மக்கள் சபையின் நோக்கு

மேம்பட்ட பங்கேற்பு ஜனநாயகத்தின் மூலம் நிலையான அரசை உருவாக்குதல்.

### மக்கள் சபையின் குறிக்கோள்

இலங்கையில் பொதுக் கொள்கைகளை உருவாக்குவதிலும் பொதுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதிலும் உகந்த குடிமக்களின் பங்களிப்பை உறுதி செய்தல், தெற்காசியாவில் ஜனசபையை மிகவும் செயலூக்கமுள்ள பங்கேற்பு ஜனநாயக வடிவமாக ஆக்கி, அதன் மூலம் மேம்பட்ட மற்றும் உணர்வுள்ள குடிமக்களின் ஒரு நிலையான அரசை 2030 ஆம் ஆண்டில் உருவாக்குவதற்கு பங்களித்தல்.

### மக்கள் சபையின் செயல் இலக்கு

1. மையப்படுத்தப்பட்ட முடிவெடுக்கும் செயற்பாட்டில் புற பொதுக்கருத்தின் செயலில் ஈடுபாடு.
2. பொதுக் கொள்கைகளை செயற்படுத்துவதில் சுறுசுறுப்பான சமூக குடிமக்களின் பங்களிப்பை உறுதி செய்தல்.
3. கொள்கை உருவாக்கும் செயல்முறைக்கு பங்களிக்கும் சுறுசுறுப்பான மற்றும் வளர்ந்த குடிமக்களை உருவாக்குதல்.
4. செயலில் குடிமக்களின் ஈடுபாட்டின் மூலம் அதிகாரத்துவத்தின் திறமையின்மை மற்றும் அரசியல் அதிகாரத்தின் தலையீடு ஆகியவற்றால் ஏற்படும் அழிவுகள் மற்றும் ஊழலை நீக்குதல்.
5. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த முடிவெடுப்பதில் மக்கள் பங்கேற்பு.
6. தீவிர குடிமக்கள் பங்கேற்பு மூலம் தற்போதுள்ள ஜனநாயக மாதிரிகளின் திறமையின்மைகளை சரிசெய்வதற்கு கூர்மையான மற்றும் மேம்பட்ட குடிமக்கள் ஈடுபாட்டுடன் ஜனசபையை ஒரு பங்கேற்பு கட்டமைப்பாக உருவாக்குதல்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்து சாரதி...

படுத்திருந்த சாரதியை பேருந்து கண்ணாடிகளை உடைத்து மர்மக் கும்பல் வாளால் வெட்டியுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 11.30 மணியளவில் பருத்தித்துறை நகரில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மருதங்கேணி வடக்கு தாளையடியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் தேவகுமார் (வயது-43) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

பருத்தித்துறை - கட்டைக்காடு வழித்தடங்களில் சேவையில் ஈடுபட்டு வரும் மேற்படி பஸ் வண்டியின் சாரதி பருத்தித்துறை நகரப் பகுதியில் பஸ் வண்டியை நிறுத்திவிட்டு அதற்குள் படுத்திருந்துள்ளார்.

நள்ளிரவு நேரம் முகத்தை துணியால் மறைத்த நிலையில் வந்த நால்வர் பஸ்கண்ணாடியை அடித்து உடைத்துள்ளனர். அவர்களிடம் இருந்து தப்பிச்சென்ற சாரதியை துரத்தி சென்று வாளால் வெட்டியுள்ளனர்.

இதில் படுகாயம் அடைந்த பஸ் சாரதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இச்சம்பவம்தொடர்பில்பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

## சீனியின்...

சிவப்பு சீனியின் விலை 415 ரூபாயாக அதிகரித்துள்ளதாக சீனி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

பல்வத்த மற்றும் செவனகல சீனி தொழிற்சாலைகளில் இருந்து மாத்திரமே சிவப்பு சீனி உற்பத்தி செய்யப்படுவதுடன், நேற்று முன்தினம் நடைபெற்ற டெண்டரின் பின்னர் ஒரு கிலோகிராம் சீனி 322 ரூபாயிற்கு விற்பனை செய்யப்பட்டது.

இதன்படி பதினெட்டு வீதம் வற் வரியும் 2.6 வீதம் சமூக பாதுகாப்பு வரியும் சேர்த்து ஒரு கிலோகிராம் சீனியின் விலை 390 ரூபாயைத் தாண்டியுள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதனுடன் தமது இலாபத்தையும் சேர்த்த பின்னர் ஒரு கிலோ சிவப்பு சீனியின் விலை 415 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி சந்தையில் 265 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதன்படி, சிவப்பு சீனியின் விலையை விட இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை சுமார் 150 ரூபாய் குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## ஐ.எம்.எப்...

குறித்த குழுவினர் இன்று வருகை நாட்டுக்கு வருகை தரவுள்ளதுடன் எதிர்வரும் 17ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் என்றும் நிதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பொருளாதாரத்தின் அண்மைக்கால போக்குகளை ஆராய்வதற்காக இந்த குழு விஜயம் செய்யவுள்ளதுடன், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொண்ட பின்னர், நாட்டின் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுகளும் குறித்த குழுவினால் மேற்கொள்ளப்படும் என்றும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சுகள் மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளுடன் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் கலந்துரையாடல்களை முன்னெடுப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.(ம-7)

## எதிர்வரும்...

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு தேர்தலுக்கான வருடம் எனக் கூறப்பட்டதுடன், இந்த வருடத்தில் குறைந்தது 3 தேர்தல்களாவது நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், நிதி நெருக்கடி காரணமாக இந்த வருடத்தில் முக்கியமான தேர்தலாக இருக்கும் ஜனாதிபதித் தேர்தலை மாத்திரம் நடத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக ஏற்கெனவே தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்த நிலையிலேயே இந்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் மாத்திரம் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறக்கப்படுவார் என முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, தம்மிக பெரேரா உள்ளிட்ட நால்வரின் பெயர்களை ஆராய்ந்து வருவதாக அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழ்ப்பாணம்...

நடராஜ், வடமாகாண ஆளுநர்பி.எஸ்.எம். சார்ள்ஸை ஆளுநர் செயலகத்தில் நேற்றைய தினம் புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

அதன்போது, நாகப்பட்டினத்திற்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் படகு சேவையை ஆரம்பித்தல், பலாலி விமான நிலைய அபிவிருத்தி நடவடிக்கைகள், சுற்றுலா துறை அபிவிருத்திகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் கப்பல் சேவை பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நாடு...

நடவடிக்கையானது நேற்று அதிகாலை12.30 மணியுடன் நிறைவடைந்த நிலையிலேயே மேற்குறித்த கைது சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 31 பேர்தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் 26 பேர்புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## 'யுக்...

பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், போதைப் பொருள் கடத்தலை எதிர்த்துப் போராடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

எனினும், சட்ட அமுலாக்கச் செயற்பாடுகள் சட்டத்தின் ஆட்சி மற்றும் உரிய நடைமுறைகளின் கொள்கைகளுக்கு இணங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

"இந்த சமநிலையை அடைவது நீதி மற்றும் பொது நம்பிக்கையைப் பேணுவதற்கு இன்றியமையாதது" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"யுக்திய" நடவடிக்கையுடன் தொடர்புடைய தேடுதல் நடவடிக்கைகளின் போது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை பற்றிய அறிக்கைகள் குறித்து உடனடி விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ள பின்புலத்திலேயே அமெரிக்க தூதுவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் இந்த நடவடிக்கை குறித்து கவலைகளை வெளிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.10
சீட்டிழுப்பு இலக்கம் 0181
R 5 5 5 7 0 7 R

தன நிதானய
திகதி - 2024.01.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1385
H 01 04 30 48 H
12491

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3597
சீட்டிழுப்பு திகதி 10.01.2024
T 02 05 10 62
T 50945

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.10
சீட்டிழுப்பு இலக்கம் 0664
கன்னி 12 22 47 49 கன்னி
40333 14

மஹஜன சம்பத
திகதி 2024/01/10
சீட்டிழுப்பு இலக்கம் 5355
W 3 9 3 1 2 0

மெகா பவர்
திகதி 10/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1703
M 04 17 20 30 38
07099

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
10.01.2024 வெற்றி வாரம் 063 வர்ணம் பசுமை
O 0 4 7 2 4 0
46213
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,061,815.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2329 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.01.10 தினம் புதன்கிழமை
25 27 36 61 O
46818
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,221,044.80

சனிதா
திகதி 2024.01.10 வெற்றி வாரம் 4490
04 42 45 64 C
97385
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,600,444.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4041 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.01.10 தினம் புதன்கிழமை
12 31 36 54 கும்பம்
844835
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,795,596.80

H 13 08 32 50 63
1505
10.01.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 490,626,026.20

ஜயோதா
திகதி 2024.01.10 வெற்றி வாரம் 1990 வர்ணம் மஞ்சள்
05 08 20 34 L
85867
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,405,829.60

அட கோடிபதி
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2155
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,541,896/-
18 31 33 73 E
359696


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

நேற்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

மத்தியதரக் காணித் திட்டத்தின் கீழ் நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் மற்றும் அரசாங்க நலத்திட்டங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியுமா என பாராளுமன்ற உறுப்பினர் நிர்மலநாதன் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளதாக பிரதமர் சுட்டிக்காட்டினார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் இப்பிரச்சினையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்த அவர், சட்டவிரோதமாக குடியேறியவர்களைக் கண்டறிந்து, அந்தக் காணிகளில் குடியிருக்க அனுமதிப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிந்து, அவர்களுக்குக் காணிகளின் ஆக்கிரமிப்புச் சான்றிதழ் வழங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சில காணிகளின் ஆதிக்க உரிமையாளர்களுக்கும், அபகரிப்பாளர்களுக்கும் இடையில் உடன்பாடு ஏற்படக்கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறான உடன்படிக்கை ஏற்படாத இடங்களில் காணி உரிமை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் விளக்கமளித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்ட காணி உறுதித் திட்டத்திற்கும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கும் முன்னுரிமை அளித்து வடக்கு மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதமர் வலியுறுத்தினார்.

சட்டபூர்வ குடியிருப்பாளர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் தேவையான நலன்களை அல்லது உதவிகளை வழங்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது என்றும் பிரதமர் இதன் போது தெரிவித்தார்.

விவசாயம், மீன்பிடி அல்லது பிற துறைகளில் ஈடுபடும் அனைவருக்கும் அவர்களுக்குத் தேவையான மானியங்கள் மற்றும் நலன்புரி சேவைகள் வழங்கப்படும் என்றும், திட்டத்தில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்களுக்கு புகார் அளிக்கலாம் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.(ம-7)


**துரித பொதிகள் சேவை**

- சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
- **அவுஸ்திரேலியா விசேட சலுகை** உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணெய் வகைகள் என்பன எம் ஊடாக அனுப்பிட முடியும்.
- ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.

**திருமுருகன் பொதிகள் சேவை**
**321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.**
**0777 554 528** (18578)

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
VISA • STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
(C-8116)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

**CANADA VISITOR VISA**

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-8116)
0777-068-777
V2 TRAVELS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு எதிராக 3 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

- யாழ்ப்பாணம் பலாலி வீதி பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில்
- இராமநாதன் வீதி முகப்புடன்
- 1 பரப்பு, 1 பரப்பு, 1 1/2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 8 முதல் மாலை 6 வரை

(18591)


**071 173 3911**
**076 853 5022**

# மோசடியில் அகப்படாதீர்கள்

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, டச்சுவீதி GPS Lane அருகாமையில் 6 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குள்ளது என பத்திரிகைகளில் கடந்த சில நாட்களாக வந்த விளம்பரம் மோசடியாக செய்யப்பட்ட விளம்பரமாகும். குறித்த ஆதனம் தொடர்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மீளாய்வு/128/23 எனும் வழக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் காணி/1320/2024 எனும் வழக்கும் நிலுவையில் உள்ளன. இக்காணியை விற்க முயல்வோருக்கு குறித்த காணியில் எவ்வித உரித்தும் இல்லை என்பதனை உரிமையாளர்கள் அறியத்தருகின்றனர். குறித்த மோசடி விற்பனையில் பங்குபற்றி காணி கொள்வனவு செய்வோருக்கெதிராகத் தலா 1 கோடி நட்டம் கோரி காணி உரிமையாளர்களால் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
**075 325 4124**
**074 136 4103**
(18592)

கொலின்ஸ் விளையாட்டு கழக ஏற்பாட்டில்
**CJ PROMTERS & ரேனுகா பந்தல் நடாத்தும்**
**CARNIVAL**



இடம்: கொலின்ஸ்
விளையாட்டு மைதானம்
(குஞ்சர் கடையடி, நெல்லியடி)
காலம்: ஜனவரி 11ம் திகதி முதல் ஜனவரி 15ம் திகதி வரை
(18555)
தொடர்புகளுக்கு:
0772546511, 0775002840

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18515)
**076 825 7716** (ஆகாஸ்)

**நீங்கள் கடுமையாக இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?**

**இன்றே பாவியுங்கள்**

சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்தஅற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும்சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு,அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

**யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY. (C-8117)

சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சந்திரச்சந்திக்கு அண்மையில்)

**வீடு வாடகைக்கு**

வலிகாமம் மேற்கு சித்தங்கேணி பண்டத்தரிப்பு பிரதான வீதிக்கு அருகில் நல்ல சூழலில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : (18580)
**077 367 1062**

**SB TRAVELS AND TOURS PVT LTD.**
No.198, Kasthuriyar Road, Jaffna.

விசாக்கள் | ரிக்கெட்டுக்கள்

Malaysia, Dubai, Thailand, China, Vietnam, India E-Visa

நாடுகளுக்கான விசாக்களும் மற்றும் சகல நாடுகளுக்குமான விமான ரிக்கெட்டுக்களை மிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Hotline : 075 555 9932
Tel : 021 222 8555
Jaffna : 076 691 1082, 83, 89
Colombu : 077 108 3482, 83
Email : sbtravelsjaffna@gmail.com
(C-8118)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.